
thinaboomi.com

நெல்லை, புதன், ஜூன் 29, 2022 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி பக்கம் 8 ₹ 3.00

உலகம்

**அமெரிக்காவில் அதிர்ச்சி சம்பவம்: கண்டெய்னர் லாரிக்குள் இருந்து 40 சடலங்கள் மீட்பு**



பக்கம் 2

இந்தியா

**சிவசேனாவை முன்னெடுத்து செல்ல மும்பை வருவோம்: அதிருப்தி அணி தலைவர் ஏக்நாத் ஷிண்டே தகவல்**



பக்கம் 3

விளையாட்டு

**நவம்பர் மாதம் நியூசி. சுற்றுப்பயணம்: இந்திய அணியின் 3 ஒருநாள், 3 டி-20 போட்டிக்கான அட்டவணை வெளியீடு**



பக்கம் 7



● சென்னையில் நேற்று, ஸ்போர்ட்ஸ் ஸ்டார்-தென்னக விளையாட்டு மாநாட்டில் கலந்து கொண்டு, விளையாட்டு வீரர் ஒருவருக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் விருது வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் டாக்டர் மாலினி பார்த்தசாரதி, முரளி, விஸ்வநாதன் ஆனந்த் ஆகியோர் உடனிருந்தனர்.

செஸ் ஒலிம்பியாட் போட்டியை நடத்துவதில் பெருமை:

# அனைவராலும் உற்றுநோக்கக்கூடிய மாநிலமாக தமிழகம் மாறப்போகிறது

## விளையாட்டு மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஜூன் 29-

**44-**வது செஸ் ஒலிம்பியாட் போட்டியை நடத்துவதால், தமிழகம் அனைவராலும் உற்றுநோக்கக் கூடிய மாநிலமாக மாறப் போகிறது. இந்த போட்டியை நடத்துவதன் மூலமாக, தமிழக அரசு பெருமையடைகிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் ஸ்போர்ட்ஸ் ஸ்டார் தென்னக விளையாட்டு மாநாடு நேற்று நடைபெற்றது. இந்த மாநாட்டை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து பேசியதாவது;-

விளையாட்டுத் துறையில் முன்னோக்கியப் பாய்ச்சலில் தமிழகம் இன்று சென்று கொண்டிருக்கிறது. வரும் ஜூலை 28-ம் தேதியன்று, 44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டி சென்னையில் நடக்கவிருப்பது நமக்கு கிடைத்திருக்கின்ற மிகப் பெரிய பெருமை.

200 நாடுகள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள், பங்கேற்கவுள்ள செஸ் ஒலிம்பியாட் திருவிழா முதல்முறையாக சென்னையில் நடைபெறவிருக்கிறது.

அகில இந்திய செஸ் கூட்டமைப்பு இந்தியாவில் செஸ் ஒலிம்பியாட் போட்டியை நடத்த தமிழக அரசு சார்பில் முயற்சிகளை மேற்கொண்டது. அப்போது அரசு உரிய நேரத்தில், உரிய நடவடிக்கை எடுத்ததால், அந்த வாய்ப்பு சென்னைக்கு கிடைத்தது.

விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் என 2,500 பேர் உலகம் முழுவதும் இருந்து போட்டிக்கு வரவுள்ளனர். இதனால் சர்வதேச அளவில்,தமிழகம் அனைவராலும் உற்றுநோக்கக் கூடிய மாநிலமாக மாறப்போகிறது.

இந்த போட்டியை நடத்துவதன் மூலமாக, தமிழக அரசு பெருமையடைகிறது. இந்த சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியை நடத்த மாநில அரசு 92 கோடியே 13 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான இலச்சினை மற்றும் சின்னத்தை சில வாரங்களுக்கு முன்னர் நான் வெளியிட்டேன்.

சதுரங்க விளையாட்டில் இருக்கிற ஒரு குதிரை போலவே, இலச்சினை வடிவமைக்கப்பட்டு, அது வணக்கம் சொல்லக்கூடிய வகையில் காணப்பட்டது. தமிழ் முறைப்படி அது வேட்டி,சட்டை அணிந்து கொண்டு அதற்கு தம்பி என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த போட்டிக்கான கவுன்டவுன் தொடங்கியுள்ள நேரத்தில், இந்த மாநாடு நடப்பது மிகமிக பொருத்தமாக இருக்கிறது.

நானும் கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களில் ஆர்வம் உள்ளவன்தான். கிரிக்கெட் போட்டிகளை பார்ப்பதை நான் தவற விடமாட்டேன். பள்ளிக் காலம் முதல் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருப்பவன். மேயராக இருந்த போதும், கிரிக்கெட் போட்டியில் கலந்து கொண்டு நான் விளையாடி இருக்கிறேன்.

விளையாட்டு போட்டிகள் என்பது விளையாடுபவர்களை மட்டுமல்ல போட்டிகளை பார்க்கக் கூடியவர்களையும் உற்சாகமூட்டக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது. இத்தகைய விளையாட்டுத்துறையில் ஏராளமான முன்னெடுப்புகளை தமிழக அரசு செய்து வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

நாடு முழுவதும் ஜூலை 1 முதல் அமல்:

# ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தடை

## மத்திய அரசு அறிவிப்பு

புதுடெல்லி, ஜூன் 29-

நாடு முழுவதும், ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டுக்கும் ஜூலை முதல் தடை விதிக்கப்படுவதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அறிவித்துள்ளது. ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி, இறக்குமதி, இருப்பு, விநியோகம், விற்பனை மற்றும் பயன்பாடு போன்றவற்றிற்கு முழுமையாக தடை விதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2009-ம் ஆண்டு....**

மக்காத தன்மை கொண்ட நெகிழியின் (பிளாஸ்டிக்) பயன்பாட்டால் உலக அளவில் சுற்றுச்சூழலுக்கும், உயிரினங்களுக்கும், முக்கியமாக கடல் வாழ உயிரினங்களுக்கும் ஆபத்துகள் பெருகிக்கொண்டே இருக்கின்றன. இதை சரி செய்யவேண்டிய அவசர நிலையில் உலக நாடுகள் இயங்கி வருகிறது. இந்தியாவில் 2009-ம் ஆண்டு முதன் முறையாக ஹிமாலச்சப் பிரதேசத்தில் நெகிழிப் பொருட்கள் பயன்பாடு தடை செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து ராஜஸ்தான், ஜம்மு & காஷ்மீர், உத்தரபிரதேசம், மஹாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்கள் முழு தடை விதித்தன.

**2019-ல் தமிழகத்தில்...**

கோவா, குஜராத், கேரளா, ஒடிசா மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் நெகிழி பயன்பாட்டிற்கு பகுதியளவு தடை விதிக்கப்பட்டன. கடந்த 2020 ஆம் ஆண்டு அண்டைய மாநிலமான கேரளா நெகிழிகளுக்குத் தடை விதித்தது. 2019-ம் ஆண்டு தமிழகத்தில் ஒரு முறை பயன்படுத்தும் நெகிழிப் பைகள் மற்றும் பாலித்தீன் கவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, வரும் ஜூலை 5ம் தேதி முதல் ஒருமுறை பயன் படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு பஞ்சாப் அரசும் அண்மையில் தடைவிதித்து உத்தரவிட்டது.

**நாடு முழுவதும்...**

இந்நிலையில், குறைந்த பயன்பாடு மற்றும் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி, இறக்குமதி, இருப்பு, விநியோகம், விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவற்றை ஜூலை 1 முதல் நாடு முழுவதும் தடை செய்யப்படும் என மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் அறிவித்துள்ளது. ஒருமுறை மட்டுமே பயன் படுத்தக் கூடிய பிளாஸ்டிக்கை கைவிடுவதற்கு மத்திய அரசு போதிய அவகாசம் அளித்துள்ளது என மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்தர் யாதவ் தெரிவித்தார்.

**பிளாஸ்டிக் கழிவுகள்...**

அகில இந்திய பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் இயக்குநர் ஜெனரல் தீபக் பல்லானி கூறுகையில், பிளாஸ்டிக் கழிவுகளை முறையாக மேலாண்மை செய்வதற்கான நடவடிக்கையை முடுக்கிவிடுவதில் கவனம் செலுத்த வேண்டும். "நாங்களும் தூய்மை இந்தியாவை விரும்புகிறோம், மாற்றத்திற்கு தயாராக இருக்கிறோம். ஆனால் பிரச்சனையின் மூலமான பிளாஸ்டிக் கழிவுகள் குறித்து ஏன் கவனிக்கவில்லை. மூல அளவில் கழிவு பிரித்தெடுத்தலை மேம்படுத்த வேண்டும்,

மேலும் நமது மறுசுழற்சி உள்கட்டமைப்பை அதிகரிக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

# பண்டிகை காலம் வருவதால் கொரோனா பரவலை தடுக்க நடவடிக்கை எடுங்கள்

## மாநிலங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தல்

புதுடெல்லி, ஜூன் 29-

பண்டிகை காலம் வருவதால் கொரோனா பரவலை தடுக்க நடவடிக்கை எடுங்கள் என்று அனைத்து மாநில அரசுகளுக்கும் மத்திய சுகாதாரத்துறை சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் கொரோனா பாதிப்பு நிலவரம் பற்றிய தரவுகளை மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. புதிதாக 11,793 பேருக்கு நோய்த் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் 27 பேர் நோய்த் தொற்றுக்குப் பலியானதையடுத்து, மொத்த பலி எண்ணிக்கை 5,25,047 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 9,486 பேர் நோய்த் தொற்றிலிருந்து குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதுவரை மொத்தம் 4,27,97,092 பேர் குணமடைந்துள்ளனர். நேற்றைய நிலவரப்படி இன்னும் 96,700 பேர் நோய்த் தொற்றுக்கான சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தமிழகத்தை பொறுத்தவரை கொரோனா தொற்று பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

குறிப்பாக, சென்னை, செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. இதையடுத்து, முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டும் என்று சுகாதாரத்துறை அமைச்சகம் பொது மக்களுக்கு உத்தரவிட்டுள்ளது. பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையே சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 11 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

மேலும், கொரோனாவால் பாதிக்கப்பட்ட 11 மருத்துவ மாணவர்களும் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். மொத்தம் 277 மாணவர்களுக்கு கொரோனா பரிசோதனை எடுக்கப்பட்ட நிலையில் 11 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மத்திய சுகாதாரத் துறை செயலாளர் ராஜேஷ் பூஷன் அனைத்து மாநில செயலாளர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் கூறியுள்ளதாவது:

பண்டிகை காலம் வருவதால் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

பெரிய திருவிழாக்களில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் மருத்துவ வசதிகளை ஏற்படுத்த வேண்டும். பொதுக்கூட்டங்கள் மற்றும் வழிபாட்டு கூட்டங்கள் நடைபெறும் இடங்களில் காற்றோட்ட வசதிகளை உறுதிசெய்ய வேண்டும் என தெரிவித்துள்ளார்.

விருப்ப ஓய்வுபெறும் அரசு ஊழியர்களின்

# மாத ஓய்வூதியத்தை கணக்கிட புதிய நடைமுறை அறிமுகம்

சென்னை, ஜூன் 29-

விருப்ப ஓய்வு பெறும் அரசு ஊழியர்களின் மாத ஓய்வூதியத்தை கணக்கிட புதிய நடைமுறை கடைப்பிடிக்கப்படவுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. அதன்படி 57 வயதில் விருப்ப ஓய்வு பெற்றால் 3 ஆண்டுகளும், 59 வயதில் விருப்ப ஓய்வு கொடுத்தால் அவர் 60 வயது பணியாற்றியதாக கருதப்பட்டு மாத ஓய்வூதியம் கணக்கிடப்படும் என்று விருப்ப ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு புதிய வெயிட்டேஜ் வெளியிடப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களின் ஓய்வுபெறும் வயது 60 ஆக உயர்த்தப்பட்டுள்ள நிலையில் விருப்ப ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு புதிய வெயிட்டேஜ் வெளியிடப்பட்டுள்ளது. இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:- அரசு ஊழியர்களின் ஓய்வுபெறும் வயது 58 ஆக இருந்தபோது அரசு ஊழியர் ஒருவர் 54 வயது மற்றும் அதற்கு குறைந்த வயதில் விருப்ப ஓய்வு பெற்றிருந்தால் அவர்களுக்கு கூடுதலாக 5 ஆண்டு பணியாற்றியதாக 'வெயிட்டேஜ்' கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் அவருக்கு மாத ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது ஓய்வுபெறும் வயது 60 ஆக உயர்த்தப்பட்டுள்ளதால் 54-க்கு பதிலாக 56 வயது மற்றும் அதற்கு கீழ் வயதில் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்றால் அவருக்கு 4 ஆண்டுகள் வெயிட்டேஜ் கொடுக்கப்பட்டு 60 ஆண்டுகள் அவர் பணியாற்றியதாக கருதப்பட்டு மாத ஓய்வூதியம் கணக்கிடப்படும். அதேபோல் 57 வயதில் விருப்ப ஓய்வு பெற்றால் 3 ஆண்டுகளும், 59 வயதில் விருப்ப ஓய்வு கொடுத்தால் அவர் 60 வயது பணியாற்றியதாக கருதப்பட்டு மாத ஓய்வூதியம் கணக்கிடப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சமரச பேச்சுவார்த்தை நடத்த வருமாறு

# அதிருப்தி எம்.எல்.ஏ.க்களுக்கு உத்தவ்தாக்கரே இறுதி அழைப்பு

மும்பை, ஜூன் 29-

கவுகாத்தியில் முகாமிட்டு உள்ள அதிருப்தி எம்.எல்.ஏக்களுக்கு உத்தவ்தாக்கரே ஆன்லைன் மூலம் பேசி மும்பை வரும் படி இறுதி அழைப்பு விடுத்து உள்ளார். அதில் பிரச்சினைகளை பேசி தீர்த்துக்கொள்வோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியான மகாவிகாஸ் கூட்டணியில் பங்கேற்று உள்ள சிவசேனா கட்சிக்கு எதிராக ஏக்நாத் ஷிண்டே தனது அதிருப்தி எம்.எல்.ஏக்களுடன் போர்க்கொடி தூக்கி கவுகாத்தியில் முகாமிட்டு உள்ளார். இதனால் கட்சியில் பெரும்பான்மையை இழந்ததால் மாநிலத்தில் கூட்டணி அரசு கவிழும் வாய்ப்பு இருப்பதாக அரசியல் பிரமுகர்கள் கருத்து தெரிவித்து உள்ளனர்.

இதற்கிடையே கவுகாத்தியில் முகாமிட்டு உள்ள அதிருப்தி எம்.எல்.ஏக்களுடன் இறுதியாக முதல் மந்திரி உத்தவ்தாக்கரே பேசினார். இது பற்றி அவர் பேசுகையில் கவுகாத்தியில் முகாமிட்டு உள்ள குடும்ப உறுப்பினர்களான சிவசேனா கட்சியை சேர்ந்த அதிருப்தி எம்.எல்.ஏக்கள் மும்பை வரும் படி அழைப்பு விடுத்து உள்ளார். நேரில் சந்தித்து சமரச பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினையை தீர்த்துக் கொள்வோம். விவகாரம் தொடர்பாக அனைவரும் கலந்து ஆலோசிப்போம். இதற்கு கட்டாயமாக ஒரு முடிவு கிடைக்கும் என்று நான் நிச்சயம் நம்புகிறேன் என்று தெரிவித்துள்ளார். உடனடியாக மும்பைக்கு புறப்பட்டு தன்னை சந்திக்கும்படி அதிருப்தி எம்.எல்.ஏக்களுக்கு இறுதி கட்ட முயற்சியாக அழைப்பு விடுத்துள்ளார்.

# இளநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வு ஜூலை 17ல் நடைபெறும்

## தேசிய தேர்வு முகமை திட்டவட்டம்

புதுடெல்லி, ஜூன் 29-


இளநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் மருத்துவ நுழைவுத் தேர்வு திட்டமிட்டபடி வருகிற ஜூலை **17-**ம் தேதி நடைபெறும் என தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

2021 நீட் தேர்வு மதிப்பெண் அடிப்படையிலான இளநிலை மருத்துவப் படிப்பை மாணவர் சேர்க்கை கலந்தாய்வு கடந்த மார்ச் மாதத்தில் முடிவடைந்தது. இதையடுத்து அடுத்த 3 மாதத்தில், 2022-ஆம் ஆண்டுக்கான நீட் தேர்வு வரும் ஜூலை 17-ஆம் தேதி நடைபெற உள்ளது.

மேலும், பொதுத் தேர்வு, மத்திய பல்கலைக்கழக இளநிலை பட்டப் படிப்புகளுக்கான சியுஇடி தேர்வு, மத்திய உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களில் இளநிலை தொழில்நுட்ப பட்டப் படிப்புகளுக்கான ஜே.இ.இ. முதல்நிலைத் தேர்வு ஆகிய தேர்வுகள், நீட் தேர்வு நடைபெறும் சமயத்திலேயே அடுத்தடுத்து நடைபெற இருக்கின்றன.

இதனால் நீட் தேர்வை ஒத்திவைக்க வேண்டும் என மாணவர்கள், பெற்றோர்கள் கோரிக்கை விடுத்த நிலையில், நீட் மருத்துவ நுழைவுத் தேர்வு திட்டமிட்டபடி வருகிற ஜூலை 17 ஆம் தேதி நடைபெறும் என தேசிய தேர்வு முகமை விளக்கம் தெரிவித்துள்ளது. மேலும் சியுஇடி, ஜே.இ.இ. முதல்நிலைத் தேர்வுகளும் திட்டமிட்டபடி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சியுஇடி தேர்வு ஜூலை 15 முதல் ஆகஸ்ட் 10 வரையிலும் ஜே.இ.இ. தேர்வு ஜூலை 21 முதல் 30 வரையிலும் நடைபெறுகின்றன.


## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| ↑ 16.17 | ↑ 18.15 |
| பாயிண்ட் 53177.45 | பாயிண்ட் 15850.2 |



**தங்கம்**
1 சவரன் ₹38,120
1 கிராம் ₹4,765



**வெள்ளி**
1 கிலோ ₹66,000
1 கிராம் ₹66.00

**$ டாலர்** ₹78.99

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



### அமெரிக்காவில் அதிர்ச்சி சம்பவம்:
# கண்டெய்னர் லாரிக்குள் இருந்து 40 சடலங்கள் மீட்பு

**வாஷிங்டன், ஜூன் 29-**



அமெரிக்காவில் கண்டெய்னர் லாரிக்குள் இருந்து 40 சடலங்கள் மீட்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம் சண்டியாகோ புறநகர் பகுதியில் ரயில் தண்டவாளம் அருகே சந்தேகத்திற்கு இடமான வகையில் கண்டெய்னர் லாரி நிற்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, அப்பகுதிக்கு விரைந்து சென்ற போலீசார் அந்த லாரியின் கண்டெய்னரை திறந்து பார்த்தனர். அப்போது, அந்த கண்டெயினரில் 50-க்கும் அதிகமானோர் மயக்கமடைந்த நிலையில் கிடைந்ததை கண்டு போலீசார் அதிர்ச்சியடைந்தனர்.

உடனடியாக மருத்துவத் துறைக்கு தகவல் கொடுக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்தவர்களை பரிசோதனை செய்ததில் கண்டெய்னர் 40 பேர் ஏற்கனவே உயிரிழந்தது தெரியவந்தது. மேலும், உயிருக்கு ஆபத்தான நிலையில் 16 பேர் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

மெக்சிகோவில் இருந்து அமெரிக்காவிற்குசட்டவிரோதமாக குடியேற அகதிகள் கண்டெய்னர் லாரியில் வந்திருக்கலாம் என போலீசார் தெரிவித்துள்ளனர். மேலும், டெக்சாஸ் நகருக்கு வந்த பின்னர் வேறு எங்கு செல்வது என தெரியாமல் லாரியை ஒதுக்குப்புறமான இடத்தில் நிறுத்தி விட்டு டிரைவர் தப்பி சென்றதால் கண்டெய்னரில் இருந்த அகதிகள் அதீத வெப்பம் மற்றும் மூச்சுத்திணறல் காரணமாக உயிரிழந்திருக்கலாம் என போலீசார் தெரிவித்துள்ளனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பானி பூரி விற்பனைக்கு தடைவிதித்தது நேபாளம்

**காத்மாண்டு, ஜூன் 29-**



நேபாள தலைநகர் காத்மாண்டுவில் பானி பூரியில் பயன்படுத்தப்படும் தண்ணீரில் காலரா பாக்டீரியா இருப்பது கண்டறியப்பட்டதையடுத்து, பானிபூரி விற்பனைக்கு தடை விதித்து லலித்பூர் மாநகராட்சி நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக நேபாள சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: -

காத்மாண்டு பள்ளத்தாக்கு பகுதியில் 7 பேருக்கு காலரா பாதிப்பு உறுதியாகி உள்ளது. இது தவிர காத்மாண்டு நகரில் 5 பேருக்கும், சந்திரகிரி , புத்தனில்கந்த் பகுதியில் தலா ஒருவருக்கு காலரா பாதிப்பு உறுதியாகி உள்ளது. தற்போது நேபாளம் முழுவதும் காலரா நோயாளிகள் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது. காலரா பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக, மாநகராட்சி மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் பானிபூரி விற்க தடை விதிக்கப்படுகிறது. பானி பூரி விற்பதால் காலரா பரவ வாய்ப்பு அதிகமென்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது காலரா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள், டெக்குவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். காலரா அறிகுறி ஏதேனும் தென்பட்டால், பொது மக்கள் அருகில் உள்ள மருத்துவமனையை அணுக வேண்டும். கோடை மற்றும் மழைக்காலங்களில் பரவும் வயிற்றுப்போக்கு, காலரா போன்ற நோய்கள் குறித்து ஒவ்வொருவரும் எச்சரிக்கையுடனும், விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### இயக்குநர் பதவியில் இருந்து முகேஷ் அம்பானி விலகல்:
# ரிலையன்ஸ் ஜியோவின் புதிய தலைவராக ஆகாஷ் நியமனம்

**மும்பை, ஜூன் 29-**

முகேஷ் அம்பானி அந்நிறுவனத்தின் தொலைத்தொடர்பு சேவை பிரிவான 'ரிலையன்ஸ் ஜியோ' இயக்குநர் பதவியை ராஜினாமா செய்தார்.

உலகின் மாபெரும் கோடீஸ்வரராக திகழும் இந்தியாவின் ரிலையன்ஸ் குழும தலைவரான முகேஷ் அம்பானி அந்நிறுவனத்தின் தொலைத்தொடர்பு சேவை பிரிவான 'ரிலையன்ஸ் ஜியோ' இயக்குநர் பதவியை ராஜினாமா செய்தார்.

இந்த நிலையில், ரிலையன்ஸ் ஜியோவின் தலைவராக முகேஷ் அம்பானியின் மகன் ஆகாஷ் அம்பானி ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேற்று நடைபெற்ற குழு கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. முன்னதாக, முகேஷ் அம்பானி நேற்று தனது பதவியை ராஜினாமா செய்தார். எனினும்,அனைத்து ஜியோ டிஜிட்டல் சேவை பிராண்டுகளுக்கும் சொந்தமான முதன்மை நிறுவனமான ஜியோ பிளாட்பார்ம்ஸ் லிமிடெட்டின் தலைவராக முகேஷ் அம்பானி தொடர்ந்து இருப்பார். மேலும், ரிலையன்ஸ் ஜியோவின் நிர்வாக இயக்குநராக பங்கஜ் மோகன் பவாரை ஐந்தாண்டு காலத்திற்கு நியமிப்பதற்கும் நேற்று நடைபெற்ற குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ரமிந்தர் சிங் குஜ்ரால் மற்றும் கே.வி. சவுத்ரி, ஆகியோர் நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்களாக பொறுப்பேற்றனர். மறுபுறம், ரிலையன்ஸ் ஜியோவின் இயக்குனராகவும் ஆகாஷ் அம்பானி செயல்படுவார். கடந்த 2017இல் இந்தியாவை மையமாகக் கொண்ட ஜியோ போனைக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்துவதில் பொறியாளர்கள் குழுவுடன் ஆகாஷ் அம்பானி நெருக்கமாக ஈடுபட்டார்.

அதன்பின், ஜியோ போன் பெரும்பாலான இந்தியர்களை 2ஜி சேவையில் இருந்து 4ஜிக்கு அழைத்துச் செல்லும் ஒரு புரட்சிகரமான சாதனமாக மாறியது. இந்த போன் புரட்சிக்கு பின்புலம் ஆக ஆகாஷ் இருந்ததாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

### அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து
# தனது ஆதரவாளர்களுடன் ஏக்நாத் ஷிண்டே ஆலோசனை

**குவகாத்தி, ஜூன் 29-**

சிவசேனா அதிருப்தி தலைவரான ஏக்நாத் ஷிண்டே தன் ஆதரவாளர்களுடன் நேற்று ஆலோசனை நடத்தியுள்ளார்.

குவகாத்தியில் முகாமிட்டுள்ள சிவசேனா அதிருப்தி எம்எல்ஏக்கள் மீதான மகாராஷ்டிர மாநில சட்டப் பேரவை செயலகத்தின் தகுதி நீக்க நடவடிக்கைக்கு உச்சநீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது. இந்த நிலையில், மும்பையில் சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் தேவேந்திர ஃபட்னவீஸ் இல்லத்தில், பாஜக மூத்த தலைவர்கள் கூடி ஆலோசனை மேற்கொண்டனர்.

இதில் பங்கேற்ற அக்கட்சியின் மூத்த தலைவர் சுதீர் முங்கன்டிவார் பின்னர் செய்தியாளர்களிடம் "உச்சநீதிமன்ற உத்தரவு குறித்து நாங்கள் ஆலோசனை நடத்தினோம். இந்த விவகாரத்தில் பொறுத்திருந்து பார்க்கலாம் என முடிவு செய்துள்ளோம். இதுவரை ஏக்நாத் ஷிண்டேயுடன் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. அவரிடமிருந்து எந்தவொரு கோரிக்கையும் பெறவில்லை" எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், மகாராஷ்டிர அரசியலின் அடுத்தகட்ட நடவடிக்கைக்காக தனக்கு ஆதரவளித்து வரும் எம்எல்ஏக்களுடன் ஏக்நாத் ஷிண்டே நேற்று ஆலோசனை நடத்த உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# பிரிக்ஸ் கூட்டமைப்பில் சேர ஈரான் விண்ணப்பம்
### 6-வது நாடாக இணைய வாய்ப்பு

**டெக்ரான், ஜூன் 29-**

பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைப்பில் சேர ஈரான் விண்ணப்பித்துள்ளது.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா ஆகிய 5 நாடுகள் இணைந்து பிரிக்ஸ் என்ற கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது. வளர்ந்து வரும் நாடுகளில் முக்கிய இடத்தில் உள்ள இந்த 5 நாடுகளும் பொருளாதாரம், அரசியல், வர்த்தகம் உள்ளிட்ட முக்கிய விவகாரங்களில் ஒருங்கிணைந்து செயல்படும் நோக்கத்தோடு பிரிக்ஸ் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இதனிடையே, பிரிக்ஸ் கூட்டமைப்பின் 14-வது கூட்டம் சீனாவில் கடந்த 23, 24-ம் தேதிகளில் நடைபெற்றது. இதில், இந்திய பிரதமர் மோடி காணொளி காட்சி மூலம் பங்கேற்றார். இந்த கூட்டத்தில் அல்கிரீயா, அர்ஜெண்டினா, கம்போடியா, எகிப்து, எத்யோப்பியா, பிஜி, இந்தோனேசியா, ஈரான், கஜகஸ்தான், மலேசியா, செனகல், தாய்லாந்து, உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் விருந்தினர்களாக பங்கேற்றன.

இந்நிலையில், பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைப்பில் சேர ஈரான் விண்ணப்பித்துள்ளது. இந்த விண்ணப்பத்தை பிரிக்ஸ் நாடுகள் ஏற்கும்பட்சத்தில் இந்த கூட்டமைப்பில் 6-வது நாடாக ஈரான் இணையும். பிரிக்ஸ் கூட்டமைப்பில் ஈரான் இணையும் பட்சத்தில் இந்த கூட்டமைப்பில் இணையும் முதல் வளைகுடா நாடு என்ற பெருமையை ஈரான் அடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

### தொடர் மின் வெட்டு:
# பாகிஸ்தானில் மக்கள் சாலை மறியல் போராட்டம்

**இஸ்லாமாபாத், ஜூன் 29-**

பாகிஸ்தானின் கராச்சி நகரில் தொடர் மின்வெட்டு காரணமாக பொதுமக்கள் இரண்டாவது நாளாக போராட்டம் நடத்தி வருகின்றனர். இப்போராட்டத்தால் கராச்சியில் உள்ள மௌரிபூர் சலையில் 15 மணி நேரமாக சாலைப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

நான்கு வருடத்தில் இல்லாத அளவுக்கு ஜூன் மாதத்தில் எரிபொருள் இறக்குமதியின் விலை பன்மடங்கு அதிகரித்துள்ளதால் இந்த சிக்கல் எழுந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கனவே, மின்பற்றாக்குறையைப் போக்க நாட்டின் பல்வேறு இடங்களில் அரசு ஊழியர்களின் பணிபுரியும் நேரத்தைக் குறைத்துள்ளது. தொழிற்சாலைகள், ஷாப்பிங் மால்களை வழக்கமான நேரத்தை விட முன்னரே மூடும்படி அரசு உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் பணவீக்கம் ஜூலையில் இரண்டு இலக்கத்துக்கு வந்தடைந்திருப்பதால் இன்னும் 6 ஆண்டுகளில் மோசமான விளைவை ஏற்படுத்துமென பொருளாதார வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

### ரசாயன டாங்க் வெடித்து விபத்து:
# ஜோர்டனில் வாயு கசிவால் 12 பேர் உயிரிழந்த பரிதாபம்

**அம்மான், ஜூன் 29-**

ஜோர்டனின் அகபா துறைமுகத்தில் உள்ள ஒரு கப்பில் கிரேன் மூலம் குளோரின் டாங்குகள் ஏற்றப்பட்டது. அப்போது, திடீரென கிரேன் செயலிழந்ததை அடுத்து, ஒரு குளோரின் டாங்க் மேலிருந்து விழுந்து வெடித்தது. இதில், பெரியளவில் மஞ்சள் நச்சு புகை வெளியேறியது. இதனால், இந்த விபத்தில் அங்கு இருந்த கப்பல்துறை பணியாளர்கள் 12 பேர் உயிரிழந்தனர். 250-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்த சம்பவத்தின் வீடியோ இணையத்தளங்களில் வைரலாகி வருகிறது.

இது குறித்து அரசு சார்பில் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

அகபா துறைமுகத்தில் மதியம் 3.15 மணிக்கு குளோரின் டாங்க் விழுந்து வெடித்தது. இதனால் வாயு கசிவு ஏற்பட்டது. காயமடைந்தவர்களில் 199 பேர் ரசாயான பாதிப்புக்குள்ளாகி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

12 பேர் உயிரிழந்த நிலையில், பலி எண்ணிக்கை உயரலாம் எனவும் கூறப்படுகிறது. இதன் எதிரொலியால், துறைமுகத்திற்கு வடக்கே 16 கி.மீ தொலைவில் உள்ள அகபா நகரவாசிகள் ஜன்னல் மற்றும் கதவுகளை மூடி உள்ளேயே இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கையாக, அகபாவின் தெற்கு கடற்கரையில் இருந்து பொதுமக்கள் வெறியேற்றப்பட்டுள்ளனர். சம்பவ இடத்திற்கு பாதுகாப்பு துறை சிறப்பு குழுக்கள் துறைமுகத்திற்கு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

### உக்ரைனில் வணிக வளாகம் மீது
# ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் 16 பேர் பலி..!

**கீவ், ஜூன் 29-**

உக்ரைன் வணிக வளாகம் மீது ரஷ்ய படைகள் ஏவுகணை தாக்குதல் நடத்தியதில் 16 பேர் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யா, அந்நாட்டின் முக்கிய நகரங்களை குறி வைத்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக மத்திய உக்ரைன் நகரமான கிரெமென்சுக் பகுதியில் உள்ள வணிக வளாகம் மீது ரஷ்ய படையினர் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி உள்ளனர். இதில் குறைந்தது 16 பேர் கொல்லப்பட்டதாக பொல்டாவா பிராந்தியத்தின் ஆளுநர் டிமிட்ரோ லுனின் கூறியுள்ளார். இந்த தாக்குதலில் 59-க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர் தொடங்குவதற்கு முன்பு கிரெமென்சுக் நகர பகுதியில் 2,20,000 மக்கள் வசித்ததாகவும், அந்த நகரத்தை ஏவுகணைகள் தாக்கிய போது, ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வணிக வளாகத்தில் இருந்ததாகவும் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கூறியுள்ளார். மேலும் வணிக வளாகம் தீப்பற்றி எரிகிறது.

மீட்புப் படையினர் தீயை அணைக்க போராடுகிறார்கள், பலியானவர்களின் எண்ணிக்கையை நினைத்துப் பார்க்க இயலாது என்று ஜெலன்ஸ்கி தமது சமூக வளைத்தள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வணிக வளாகத்தில் அதிக மக்கள் கூட்டம் இருந்த போது குறி வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் அதிக எண்ணிக்கையில் உயிரிழப்புகளை ஏற்படுத்த ரஷ்ய படைகள் திட்டமிட்டது தெரிய வந்துள்ளதாக உக்ரைன் பாதுகாப்பு அமைச்சகம் குற்றம் சாட்டியுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

**29-06-2022**




**மேஷம்:-** காரிய வெற்றி தரும் களிப்பான நாள். அரசு ஆதரவு இருக்கும். கல்வியில் தேர்ச்சி உண்டு. தன்னம்பிக்கை மற்றும் தைரியம் அதிகரிக்கும். அதிகாரம் மிக்க பதவி உயர்வு ஏற்படலாம்.

**ரிஷபம்:-** இன்று சுமாரான நாள். தனலாபம், குடும்ப நிம்மதி, குடும்ப சுகம் ஆகியவை குறையும். புதிய தொழில் முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது. வார்த்தைகளை அளந்து பேசுவது வம்புகளைத் தவிர்க்க உதவும்.

**மிதுனம்:-** பெரியோர் நேசம், பதவி உயர்வு, மனத் திருப்தி, தொழில், வியாபாரத்தால் பணவரவு என யோகங்கள் தரும் நாள். புத்தாடை அணிகலன்கள் புதிதாகச் சேரும். பெயரும், புகழும் உண்டாகும்.

**கடகம்:-** ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். வேதனைகளைச் சாதனைகளாக மாற்றுங்கள். சிலருக்கு அந்தஸ்துக் குறைதல், பணவிரயங்கள் ஏற்படலாம். கடின உழைப்பால் கல்வியில் தேர்ச்சி ஏற்படும்.

**சிம்மம்:-** சாதுர்யப் பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். பலவழிகளில் பணவரவு உண்டாகிப் பெரிய மனிதர் எனப் பெயரெடுப்பீர்கள். அரசாங்கத்தால் ஆதாயங்கள் ஏற்படும். ஆபரணங்கள் சேரும். அந்தஸ்தும் உயரும்.

**கன்னி:-** காரிய அனுகூலம் ஏற்படும் நாள். அரசு மற்றும் அரசியல்வாதிகள் ஆதரவால் நன்மைகள் நடக்கும். தன்னம்பிக்கை கூடும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். தெய்வ தரிசனப் பயணங்கள் திருப்தி தரும்.

**துலாம்:-** இனிய பயணங்கள் ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படலாம். தெய்வீக காரிய ஈடுபாடு, தானதரும சிந்தனை ஏற்படும். தொழிலில் நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:-** வழக்கு விவகாரங்களைத் தள்ளிப் போடுவது நல்லது பணிவுடன் அதிகாரிகளிடம் நடந்து கொள்வது நல்லது. நினைப்பது ஒன்று, நடப்பது ஒன்றாக இருக்கும்.

**தனுசு:-** உயர்போகம், நல்ஆரோக்கியம், சந்ததி விருத்தி, பதவி உயர்வு என அதிர்ஷ்டம் தரும் நாள். வாக்கு வன்மையால் வருமானம் பெருகும். பயணங்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மகரம்:-** பல வழிகளிலும் பணவரவு ஏற்படும். எல்லா வகையிலும் ஏற்றம் கிடைக்கும். நல்ஆரோக்கியம், நண்பர்கள் சந்திப்பு, திருமணம் மற்றும் நல்முன்னேற்றம் ஆகியவை ஏற்படும்.

**கும்பம்:-** மனைவி, மக்களின் உடல் நிலையில் அக்கறை தேவை. மேலதிகாரிகள் மற்றும் பெரியவர்களிடம் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. செலவுகள் கட்டுக்கடங்காது இருக்கும்.

**மீனம்:-** இட மாற்றங்களை எதிர்பார்க்கலாம். முறையற்ற வழிகளில் பணம் வரலாம். உறவுகளிடையே மனக்கசப்பு உருவாகலாம். கோபத்தைக் குறைத்தால் நன்மை ஏற்படும்.

# மும்பையில் அடுக்குமாடி கட்டிடம் இடிந்து விழுந்ததில் 3 பேர் பலி: 12 பேர் உயிருடன் மீட்பு

**மும்பை, ஜூன் 29-**

மும்பையில் அடுக்குமாடிக் கட்டிடம் சரிந்து விழுந்ததில் 3 பேர் பலியானதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இதில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் இதுவரை 12 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து தேடுதல் பணி நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைபெற்று வரும் மீட்புப் பணியில், 28 மற்றும் 30 வயது மதிக்கத்தக்க இரண்டு ஆண்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற போது, இருவரும் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர். மேலும் கட்டட இடிபாடுகளில் 10க்கும் மேற்பட்டோர் சிக்கியிருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. கட்டட இடிபாடுகளில் சிக்கியிருப்பவர்களை மீட்கும் பணியில் மீட்புப் படையினர் நள்ளிரவு முதல் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள்.

குர்லா அருகே நாயக் நகர் பகுதியில் அமைந்திருந்த அடுக்குமாடி குடியிருப்புப் கட்டிடம் நேற்று முன்தினம் நள்ளிரவில் இடிந்துவிழுந்து விபத்துக்குள்ளானதில் பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

கட்டட இடிபாடுகளில் 20 முதல் 22க்கும் மேற்பட்டவர்கள் சிக்கியிருக்கக் கூடும் என்று அக்கம் பக்கத்தினர் தகவல் தெரிவித்தனர். இதில் இதுவரை 12 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். ஏராளமான தீயணைப்பு வீரர்கள், மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். பாதுகாப்பு வாகனங்களும், நவீன கருவிகளும் தேடுதல் பணியில் ஈடுபடுத்தப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தங்கம் விலை பவுனுக்கு 80 ரூபாய் குறைந்தது

**சென்னை, ஜூன் 29-**

தங்கம் விலை நேற்று பவுனுக்கு ரூ.80 குறைந்து ரூ.38,120-க்கு விற்பனையானது.

உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த சூழலால் உலகம் முழுவதுமே பொருளாதார அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளது. கச்சா எண்ணெய், தங்கம் விலை கடுமையாக உயர்ந்து வருகின்றன. பங்குச்சந்தைகள் சரிந்து வருகின்றன. உலகம் முழுவதும் முதலீட்டாளர்கள் பெருமளவில் பங்குச்சந்தைகளில் இருந்து வெளியேறி தங்கத்தில் தங்கள் முதலீடுகளை மாற்றி வருகின்றனர். இதன் எதிரொலியாக இந்தியாவிலும் தங்கத்தின் விலை உயர்ந்து வந்தது.



இந்தநிலையில் தங்கம் விலை நேற்று குறைந்துள்ளது. சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு 10 ரூபாய் குறைந்து ரூ.4,765-க்கு விற்பனையானது. பவுனுக்கு ரூ.80 குறைந்து ரூ.38,120-க்கு விற்பனையானது. இதேபோல் 24 காரட் சுத்தத் தங்கத்தின் விலை 8 கிராம் ரூ.41,312-க்கு விற்பனையானது. வெள்ளியின் விலை 50 பைசா குறைந்து ரூ.66.00-க்கு விற்பனையானது. ஒரு கிலோ வெள்ளியின் விலை நேற்று ரூ.66,000 ஆக இருந்தது.

# சிக்னியா எஸ்குலுசிவ் சென்டர் சென்னை மாநகரில் தொடக்கம்

**சென்னை, ஜூன் 29-**

செவிப்புலன் துறையில் முன்னணியில் இருக்கும் சிக்னியா, ஆரா ஹியர்ரிங் மற்றும் ஸ்பீச் கேர் உடன் இணைந்து சென்னையில் தனது எஸ்குலுசிவ் சென்டரை இன்று தொடங்குவதாக அறிவித்துள்ளது.

உலக சுகாதார மதிப்பீட்டின்படி, இந்தியாவில் சுமார் 63 மில்லியன் மக்கள் குறிப்பிடத்தக்க செவிப்புலன் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது இந்திய மக்கள் தொகையில் 6.3 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. காது கேளாமை எந்த வயதிலும் எவரையும் பாதிக்கலாம் மற்றும் உடனடி கவனம் தேவைப்படும் ஒன்றாகும் இதை புறக்கணித்தால் பெரும்பாலும் உடல் மற்றும் சமூக சீரழிவுக்கு வழிவகுக்கிறது.சென்னை மக்களுக்கு ஒலி தரம் மற்றும் இணைப்பில் ஒரு குவாண்டம் லீப்பை அறிமுகப்படுத்துவதில் சிவன்டோஸ் இந்தியா உற்சாகமாக உள்ளது, இது பயனர்கள் தங்கள் தனிப்பட்ட செவிப்புலன் அனுபவத்தை அதிக கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவுகிறது.

நாங்கள் தொடர்ந்து புதிய தொழில்நுட்ப தீர்வுகளை புதுப்பித்து வருகிறோம் மற்றும் மேம்பட்ட டிஜிட்டல் தயாரிப்புகளை அறிமுகப்படுத்துகிறோம், இது பயனர்களுக்கு அவர்களின் தனிப்பட்ட தேவைகளுக்காக தனிப்பயனாக்கப்பட்ட உயர்தர கேட்கும் அனுபவத்தை வழங்குகிறது. சிக்னியாவின் திருப்புமுனைத் தொழில்நுட்பமானது, இயற்கையான ஒலியுடைய சொந்தக் குரலையும் சமரசமில்லாத செவித்திறனையும் நேரடி ஸ்ட்ரீமிங்குடன் வழங்குவதற்கு மிகவும் மேம்பட்ட இணைப்பை ஒருங்கிணைக்கிறது என சிவன்டோஸ் இந்தியா பிரைவேட். லிமிடெட் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குனர் அவினாஷ் பவார் கூறினார்.

### தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில்

# முதுநிலை, முனைவர் படிப்புகளுக்கு ஆன்லைன் விண்ணப்பம் தொடக்கம்

**கோவை, ஜூன் 29-**

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடப்பு கல்வியாண்டுக்கான முதுநிலை மற்றும் முனைவர் படிப்புக்கான ஆன்லைன் விண்ணப்பம் தொடங்கியது.

இது தொடர்பாக, துணை வேந்தர் கீதாலட்சுமி கூறியதாவது:

வேளாண்மைப் பல்கலைக் கழகம் சார்பில் கோவை, மதுரை, மேட்டுப் பாளையம், திருச்சி, தேனி, கிள்ளிக்குளம் உள்ளிட்ட 8 கல்லூரிகளில் 32 துறைகளில் எம்.எஸ்.சி. முதுநிலை பட்டப்படிப்பும், 28 துறைகளில் முனைவர் (பி.ஹெச்டி) பட்டப்படிப்பும் கற்பிக்கப்படுகின்றன. இரண்டாண்டுகளை கொண்ட முதுநிலை பட்டப் படிப்பில் 400 இடங்களும், மூன்றாண்டுகளை கொண்ட முனைவர் பட்டப் படிப்பில் 200 இடங்களும் உள்ளன.

நடப்பு கல்வியாண்டு முதுநிலை மற்றும்முனைவர் படிப்புக்கான மாணவர் சேர்க்கை செயல்முறை தொடங்கியுள்ளது. https://admissionsatpgschool.tnau.ac.in இணையதளம் மூலம் மட்டுமே மாணவர்கள் விண்ணப்பிக்க வேண்டும். இளங்கலை, முதுநிலை படிப்பை முடித்த மாணவர்கள் புரோவிஷனல் சான்றிதழ் மூலமாகவும், தற்போது இறுதியாண்டு படிக்கும் மாணவர்கள் பல்கலைக் கழக பதிவாளர் அல்லது கல்லூரி முதல்வர்களிடம் இருந்து படிப்பு முடிவுற்ற சான்றிதழ் (கோர்ஸ் கம்ப்ளீஷன் சான்றிதழ்) பெற்றும் விண்ணப்பிக்கலாம். எனினும், அவர்கள் பட்டப்படிப்பு சான்றிதழை சமர்ப்பித்த பின்னரே மாணவர் சேர்க்கை உறுதிப்படுத்தப்படும். மாணவர் சேர்க்கைக்கான பிரத்யேக இணையதள பக்கம் ஆகஸ்ட் 8-ம் தேதி நள்ளிரவு 11.59 மணி வரை இயங்கும். கொரோனா காரணமாக கடந்தாண்டுகளில் மாணவர் சேர்க்கை தள்ளிப்போனது. நடப்பாண்டு உரிய நேரத்தில் சேர்க்கை நடத்தி முடிக்கப்படும். ஆகஸ்ட் 27-ம் தேதி மாதிரித் தேர்வு, 28-ம் தேதி நுழைவுத் தேர்வு நடத்தப்படும். மாதிரித் தேர்வு என்பது மாணவர்கள் அசல் நுழைவுத் தேர்வை எழுதுவதற்கான பயிற்சி. நுழைவுத்தேர்வு பல்கலைக் கழக வளாகத்தில் நடத்தப்படும். செப்டம்பர் 2-ம் வாரம் சேர்க்கை தொடர்பான பணிகள் அனைத்தும் இறுதி செய்யப்பட்டுவிடும். செப்டம்பர் 3-வது வாரம் மாணவர்கள் கட்டணம் செலுத்தி படிப்புகளில் சேர்ந்து கொள்ள வேண்டும். அக்டோபர் முதல் வாரம் வகுப்புகள் தொடங்கும். இவ்வாறு அவர் கூறினார்.

### வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டையில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் 2 நாள் சுற்றுப்பயணம்

**வேலூர், ஜூன் 29-**

வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை மாவட்டங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் 2 நாள் அரசுமுறை சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார்.

திருப்பத்தூர் மாவட்டமாக பிரிக்கப்பட்டு புதிய கலெக்டர் அலுவலகம் கட்டப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா இன்று நடைபெற உள்ளது. இதை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார். இதற்காக முதல்வர், இன்று காலை கலெக்டர் அலுவலகத்தை திறந்து வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார்.

இதை தொடர்ந்து, இன்று வேலூர் புதிய பஸ் நிலையத்தை திறந்து வைக்க உள்ளார். இதையடுத்து வேலூர் சுற்றுலா மாளிகையில் மதிய உணவு சாப்பிட்டு விட்டு, சிறிது நேரம் ஓய்வு எடுக்கிறார். அதன் பிறகு இன்று மாலை 4 மணியளவில் வேலூர் கோட்டை மைதானத்தில் நடைபெறும் விழாவில் பங்கேற்கும் முதல்வர் மு.க. ஸ்டாலின், அங்கு பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசுகிறார்.

வேலூர் பயணத்தை முடித்து விட்டு இன்று இரவு முதல்வர் மு.க.ஸ்டாலின் ராணிப்பேட்டை செல்கிறார். அன்றிரவு அங்கு தங்குகிறார். மறுநாள் 30-ம்தேதி காலை ராணிப்பேட்டையில் கட்டப்பட்டுள்ள புதிய கலெக்டர் அலுவலகத்தையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார். பின்னர் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிறார். இந்த நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் சென்னை செல்கிறார்.

### ஆன்லைன் விளையாட்டுத் தொடர்பாக

# தமிழக அரசு புதிய சட்டத்தை இயற்ற நடவடிக்கை வேண்டும்

## ஆய்வுக்குழு அறிக்கையில் தகவல்

**சென்னை, ஜூன் 29-**

ஆன்லைன் ரம்மி விளையாட்டுகளால் விளையாடுவோரின் திறன்கள் மேம்படுவதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறு என்றும் ஆன்லைன் விளையாட்டுத் தொடர்பாக பழைய சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டத்தை கொண்டு வர தமிழக அரசு இயற்ற நடவடிக்கை வேண்டும் என்றும் ஓய்வு பெற்ற நீதிபதி கே.சந்துரு தலைமையிலான ஆய்வுக் குழு அளித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல உயிர்களை பலி வாங்கி வரும், ஆன்லைன் ரம்மியைத் தடை செய்வது குறித்து அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை, முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் திங்கள்கிழமை தாக்கல் செய்யப்பட்டது. குழுவின் தலைவரும், குழுவினர் அறிக்கையை அளித்தனர். ஓய்வு பெற்ற நீதிபதியுமான கே.சந்துரு தலைமையிலான ஆய்வுக் குழு அளித்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆன்லைன் ரம்மிக்குத் தடை விதிப்பதற்கு அவசர சட்டம் தொடர்பாக முதல்வர் ஸ்டாலினிடம் அளித்த 71 பக்க அறிக்கையில், பொது மக்களின் உடல்நலம் இந்த விளையாட்டுக்ளால் பாதிக்கப்படுகிறது. ஆன்லைன் ரம்மி விளையாடுவோரின் திறன்கள் மேம்படுவதாகக் கூறப்படுவது தவறு. இந்த ஆன்லைன் ரம்மி விளையாட்டுகளை முறைப்படுத்த இயலாது என்பதால் தடை செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆன்லைன் விளையாட்டுத் தொடர்பாக தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம். ஏற்கனவே கொண்டு வரப்பட்ட சட்டத்தைக் கைவிட்டு புதிய சட்டத்தைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆன்லைன் ரம்மி போன்ற விளையாட்டுகளுக்குத் தடை விதிக்கும் வகையில், மத்திய அரசு தேசிய அளவில் ஒரு சட்டம் கொணடு வர வேண்டும் என இந்தக் குழு பரிந்துரை செய்கிறது. பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் ஆன்லைன் விளையாட்டு நிறுவனங்கள் செயல்படுவதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு இது குறித்து வெளியிட்ட செய்திக் குறிப்பில், தமிழ்நாட்டில் ஆன்லைன் ரம்மி போன்ற இணையதள அடிப்படையிலான விளையாட்டுகளில் பொது மக்கள், குறிப்பாக நடுத்தர மக்கள், ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டு அதில் பெருமளவில் பணத்தை இழக்கின்றனர். எனவே, இந்த விளையாட்டினால் ஏற்படக்கூடிய நிதியிழப்பு, பாதிப்புகளை தரவுகளுடன் ஆராயவும், அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து உரிய பரிந்துரைகளை வழங்கவும் குழு அமைக்க உத்தரவிடப்பட்டது.

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கே.சந்துரு தலைமையில் கடந்த 10-ஆம் தேதி அமைக்கப்பட்ட குழுவில், ஐஐடி தொழில்நுட்ப வல்லுநர் சங்கரராமன், ஸ்நேஹா அமைப்பின் நிறுவனர் லட்சுமி விஜயகுமார் காவல் துறை கூடுதல் இயக்குநர் வினித் தேவ் வான்கடே ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இந்தக் குழு முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து அறிக்கையை வழங்கினார். குழுவின் சார்பில் நீதிபதி சந்துரு அறிக்கையை அளித்தார்.

நீதிபதி சந்துரு தலைமையிலான குழுவின் அறிக்கை மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து திங்கள் கிழமை மாலை (நேற்று முன்தினம்) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக தமிழக அரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஓய்வு பெற்ற திருக்கோவில் பணியாளர்களுக்கு பணிக்கொடை

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, ஜூன் 29-**

சென்னை தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் பணியாற்றி ஓய்வு பெற்ற 69 திருக்கோவில் பணியாளர்கள் மற்றும் காலஞ்சென்ற திருக்கோவில் பணியாளர் ஒருவரின் வாரிசுதாரர் ஆகியோருக்கு ரூ. 2,70,09,752/- பணிக்கொடை வழங்கிடும் அடையாளமாக 12 ஓய்வு பெற்ற திருக்கோவில் பணியாளர்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்கு பணிக்கொடையும், மயிலாப்பூர்-அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், வல்லக்கோட்டை-அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மற்றும் மாமல்லபுரம்-ஆளவந்தார் அறக்கட்டளை ஆகியவற்றில் பணியாற்றி, பணிக் காலத்தில் இறந்த 3 திருக்கோவில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்பநல நிதியாக தலா 3 லட்சம் ரூபாய்க்கான காசோலை ஆகியவற்றை முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று வழங்கினார்.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலகத்திலிருந்து அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் குமரகுருபரன் ஆகியோரும், காணொலிக் காட்சியின் வாயிலாக திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலிருந்து சட்டமன்ற உறுப்பினர் எஸ். சந்திரன், திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் மரு. ஆல்பி ஜான் வர்கீஸ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மாஸ்க் அணியாவிட்டால் மதுபானம் கிடையாது

## டாஸ்மாக் நிர்வாகம் உத்தரவு

**சென்னை, ஜூன் 29-**

மாஸ்க் அணிந்து வருபவர்களுக்கு மட்டுமே மதுபானம் வழங்க வேண்டும் என்று டாஸ்மாக் நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

நாடு முழுவதும் கொரோனா பரவல் வேகம் அதிகரித்து வருகிறது. தமிழகத்திலும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எனவே டாஸ்மாக் கடைகளில் கொரோனா தடுப்பு வழிகாட்டுதல்களை மீண்டும் கடைபிடிக்குமாறு மாவட்ட மேலாளர்களுக்கு டாஸ்மாக் நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக டாஸ்மாக் அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

தமிழகத்தில் கொரோனா தொற்று மீண்டும் வேகமாக பரவி வருகிறது. எனவே பொது இடங்களில் முக கவசம் அணிவதை கண்டிப்பாக பின்பற்ற அரசு உத்தரவிட்டுள்ளது. அதே போல் டாஸ்மாக் கடைகளிலும் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை கடைப்பிடிக்க அதிரடி உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

மாஸ்க் அணிந்து வருபவர்களுக்கு மட்டுமே மதுபானம் வழங்க வேண்டும், மது வாங்க வருவோரை கூட்டமாக நிற்க அனுமதிக்க கூடாது,

இடைவெளி விட்டு வரிசையில் நிற்க வேண்டும் என்று ஊழியர்களுக்கு அறிவுறுத்துமாறு டாஸ்மாக் மாவட்ட மேலாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதுதொடர்பாக ஊழியர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் டாஸ்மாக் ஊழியர்களும் முக கவசத்தை சரியான முறையில் அணிந்திருப்பதுடன் அவர்கள் தங்கள் கைகளை அடிக்கடி கிருமி நாசினியால் சுத்தம் செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அதே போல் டாஸ்மாக் கடைகளிலும் தினமும் தூய்மை பணிகளை மேற்கொண்டு சுத்தமாக வைத்திருக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகளை மாவட்ட மேலாளர்களும், ஊழியர்களும் கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும். கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றாவிட்டால் சம்பந்தப்பட்ட கடை ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

### 161 ஆலைகளுக்கு மீண்டும் அனுமதி:

# பட்டாசு ஆலைகள் இரவு நேரத்தில் இயங்கினால் உரிமம் நிரந்தரமாக ரத்து

## விருதுநகர் மாவட்ட கலெக்டர் எச்சரிக்கை

**சென்னை, ஜூன் 29-**

விருதுநகர் மாவட்டத்தில் விதிமுறைகளை மீறி செயல்பட்டதாக உரிமம் ரத்து செய்யப்பட்ட 179 பட்டாசு ஆலைகளில் 161 ஆலைகள் மீண்டும் செயல்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இரவு நேரங்களில் பட்டாசு ஆலைகள் செயல்பட்டால் உரிமம் நிரந்தரமாக ரத்து செய்யப்படும் என்று விருதுநகர் மாவட்ட கலெக்டர் எச்சரிக்கை விடுத்துள்ளார். விருதுநகர் மாவட்டத்தில் இரவு நேரத்தில் பட்டாசு ஆலைகள் இயங்கினால் ஆலையின் உரிமை நிரந்தரமாக ரத்து செய்யப்படும் என மாவட்ட ஆட்சியர் மேகநாத ரெட்டி எச்சரிக்கை விடுத்துள்ளார். விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பட்டாசு ஆலைகள் அதிகம் இயங்கி வருகின்றன.

இந்நிலையில் விருதுநகர் மாவட்டத்தில் விதிமுறைகளை மீறி செயல்பட்டதாக ஆலையின் உரிமம் ரத்து செய்யப்பட்ட 179 பட்டாசு ஆலைகளில் 161 பட்டாசு ஆலைகள் மீண்டும் செயல்பட மாவட்ட ஆட்சியர் நேற்று அனுமதி அளித்துள்ளார். தொழிலாளர்களின் நலன் கருதி இந்த ஆலைகள் செயல்பட அனுமதி அளிக்கப்படுவதாக கூறிய அவர், விருதுநகர் மாவட்டத்தில் இரவு நேரத்தில் பட்டாசு ஆலைகள் இயங்கினாலோ பணியில் குழந்தைத் தொழிலாளர்களை ஈடுபடுத்தினாலோ ஆலையின் உரிமை நிரந்தரமாக ரத்து செய்யப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# கோயில் நில ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் அறநிலையத்துறை தூங்கிக்கொண்டிருக்கிறது

## சென்னை ஐகோர்ட் கண்டனம்

**சென்னை, ஜூன் 29-**

கோயில் நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளைத் தடுக்க வேண்டிய இந்து சமய அறநிலையத் துறை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் தூங்கிக் கொண்டிருக்கிறது என்று சென்னை உயர் நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் அமைந்துள்ள காளத்தீஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான 18.72 ஏக்கர் நிலத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி சீனிவாசன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்தார். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவை அமல்படுத்தவில்லை எனக் கூறி சீனிவாசன் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்தார். இந்த வழக்கு தலைமை நீதிபதி முனீஸ்வர் நாத் பண்டாரி மற்றும் நீதிபதி என்.மாலா ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, அறநிலையத் துறை தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், “வழக்கு தொடர்பான கோயிலுக்கு சொந்தமான 18 இடங்களில் இருந்த ஆக்கிரமிப்புகளில் 14 இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன. எஞ்சியவற்றை அகற்ற அவகாசம் வழங்க வேண்டும்” எனக் கோரினார். மேலும், தமிழகத்தில் தற்போது வரை 1100 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், கோயில் நிலங்களில் ஆக்கிரமிப்புகள் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதைத் தடுக்க வேண்டிய இந்து சமய அறநிலையத் துறை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் தூங்கி கொண்டிருப்பதாக கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கோயில் நிலங்களில் தொடர்ச்சியாக ஆக்கிரமிக்கப்படுவதாக, வழக்குகள் தொடரப்படுகிறது. ஆக்கிரமிப்புகளை ஆரம்பத்திலேயே தடுத்த நிறுத்த வேண்டிய இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் வெறும் ஊதியத்தை மட்டும் பெற்றுக்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என்றும் நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்தனர்.

கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யும் வரை அறநிலையத் துறை அதிகாரி என்னதான் செய்கிறார்கள் என்று கேள்வி எழுப்பிய நீதிபதிகள், ஆக்கிரமிப்புகள் தொடர்பான வழக்குகள் உயர் நீதிமன்றத்திற்கு வந்த பிறகு நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னர், ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபடுவது எதற்காக என்றும் கேள்வி எழுப்பினார். வரலாற்று சிறப்பு மிக்க பல்வேறு கோயில்கள் இன்னும் முறையாக பராமரிக்கப் படாமல் இருப்பதற்கு, இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் செயல்படாத நிலையே காரணம். 50 ஆண்டு காலமாக இருக்கின்ற அக்கிரமிப்புகளை அகற்றாமல், இப்போது கடந்த ஓராண்டாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறுவது ஏற்று கொள்ள முடியாது. கோயில் நில குத்தகை மூலம் வருமானம் வருவதால், அது இந்து சமய அறநிலையத்துறைக்கு பயனளிக்கும் என்பதால்தான், கோயில் நிலங்களை குத்தகைக்கு விட நீதிமன்றம் அனுமதி அளிக்கிறது என்று கருத்து தெரிவித்த நீதிபதிகள், இந்த வழக்கின் விசாரணையை மூன்று வாரங்கள் தள்ளி வைத்தனர்.

# அ.தி.மு.க. பொதுக்குழுவுக்கு தடை விதிக்கும் திட்டமில்லை

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

**சென்னை, ஜூன் 29-**



அ.தி.மு.க பொதுக்குழுவுக்கு தடை விதிக்கும் திட்டமில்லை என தெரிவித்த மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், கண்டிப்பாக அனைவரும் மாஸ்க் அணிய வேண்டும் அதில் எந்த விதிவிலக்கும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஜூலை 11-ல் நடைபெறும் அ.தி.மு.க பொதுக்குழுவுக்கு தடை கோரி மீண்டும் நீதிமன்றத்தை நாட பன்னீர்செல்வம் தரப்பு முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனிடையே அ.தி.மு.க முன்னாள் சபாநாயகர் தனபால், எடப்பாடி பழனிச்சாமி தீவிர ஆதரவாளரும் முன்னாள் அமைச்சருமான கடம்பூர் ராஜூ ஆகியோருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அவர்கள் தங்களைத் தனிமைப் படுத்திக் கொண்டு சிகிச்சை பெற்று வருவதாக கூறப்படும் நிலையில் கடந்த சில நாட்களாக எடப்பாடி பழனிச்சாமி வீட்டில் நடைபெற்ற அனைத்து ஆலோசனைக் கூட்டங்களிலும் கடம்பூர் ராஜூ கலந்து கொண்டார். முன்னாள் அமைச்சர்கள் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோருடன் கடம்பூர் ராஜூ நெருக்கமாக நின்று பேட்டி அளித்ததும் குறிப்பிடத்தக்கது. மேலும் ஜூன் 23ஆம் தேதி நடைபெற்ற அ.தி.மு.க பொதுக்குழு கூட்டத்தில் அவர் கலந்து கொண்ட நிலையில் தற்போது அவருக்கு உறுதி செய்யப்பட்டு உள்ளது நிர்வாகிகளிடையே கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனிடையே எடப்பாடி பழனிச்சாமியின் மனைவிக்கும் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

கொரோனா பரவல் காரணமாக ஜூலை 11ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள பொதுக்குழுவிற்கு அனுமதி கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. பரபரப்பான சூழலுக்கு மத்தியில் ஜூலை 11ஆம் தேதி பொதுக்குழுவை நடத்துவதற்கான ஏற்பாடுகளை எடப்பாடி டீம் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

இதனிடையே அ.தி.மு.க பொதுக்குழுவிற்கு தடை விதிக்கப்படுமா என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியத்திடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த அவர், அ.தி.மு.க பொதுக்குழுவுக்கு தடை விதிக்கும் திட்டமில்லை, அரசு விதித்துள்ள கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி பொதுக்குழுவை நடத்தலாம். முகக்கவசம் அணிவதில் இருந்து எந்த விதிவிலக்கும் அளிக்கப்படவில்லை என்றார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# எடப்பாடி பழனிசாமிக்கு மேலும் 9 பொதுக்குழு உறுப்பினர்கள் ஆதரவு

**சென்னை, ஜூன் 29-**

அ.தி.மு.கவில் ஒற்றைத் தலைமை என்ற கோரிக்கை எழுந்துள்ள நிலையில், எடப்பாடி பழனிசாமிக்கு மேலும் 9 பொதுக்குழு உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்துள்ளது.பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வக்குமார் தலைமையில் 9 பேர் சென்னையில் உள்ள எடப்பாடி பழனிசாமி இல்லத்தில், அவரை நேற்று காலை சந்தித்து தங்களது ஆதரவை தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

பெரம்பலூர் ஒன்றிய செயலாளர் செல்வக்குமார் தலைமையில், பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஓ. பன்னீர்செல்வத்தின் ஆதரவாளர்கள் நேற்று அணி மாறி எடப்பாடி பழனிசாமிக்கு தங்களது ஆதரவுக்கரத்தை நீட்டியுள்ளனர். இதன் மூலம், 2,665 அ.தி.மு.க பொதுக்குழு உறுப்பினர்களில், 2,432 பேர் தங்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக எடப்பாடி பழனிசாமி தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

### 50 எம்.எல்.ஏக்களின் ஆதரவு உள்ளது:

# சிவசேனாவை முன்னெடுத்து செல்ல மும்பை வருவோம்

## அதிருப்தி அணி தலைவர் ஏக்நாத் ஷிண்டே தகவல்

**குவகாத்தி, ஜூன் 29-**

சிவசேனா அதிருப்தி தலைவரான ஏக்நாத் ஷிண்டே விரைவில் மும்பை வந்து சிவசேனா கட்சியை முன்னெடுத்து செல்வோம் என்றும், தனக்கு 50 எம்.எல்.ஏக்களின் ஆதரவு இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். ஏக்நாத் ஷிண்டே தன் ஆதரவு எம்எல்ஏக்களுடன் அசாம் மாநிலம் குவாகாத்தியிலுள்ள ரேடிசன் புளூ விடுதியில் முகாமிட்டுள்ளார். முதலில் 22 எம்எல்ஏக்களுடன் அங்கு சென்றார். அதன் பின், மேலும் சில எம்.எல்.ஏ.க்கள் ஷிண்டேவின் அணியில் இணைந்துகொண்டனர்.

தற்போது மகாராஷ்டிர அரசியலில் உச்சகட்ட பரபரப்பு ஏற்பட்டுள்ள நிலையில், ஏக்நாத் ஷிண்டே “நாங்கள் சிவசேனாயில் தான் இருக்கிறோம். அதில் எந்த சந்தேகமும் வேண்டாம். அக்கட்சியை முன்னெடுத்துச் செல்ல விரைவில் மும்பை வருவோம். எனக்கு 50 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு வழங்கியுள்ளனர். யாரும் வற்புறுத்தலின் பேரில் அழைத்துவரப்படவில்லை” எனத் தெரிவித்துள்ளார். முன்னதாக, சிவசேனா கட்சியின் எம்.பி சஞ்சய் ராவத் ‘அதிருப்தி எம்எல்ஏக்களில் இன்னும் சில பேர் எங்களுடன் தொடர்பில் உள்ளனர். அவர்களின் குடும்பத்தினரும் எங்களுடன் தொடர்பில் உள்ளனர், அவர்கள் மீண்டும் எங்களிடம் திரும்புவார்கள் என்று நம்புகிறோம்’ எனக் கூறியது குறிப்பிடத்தக்கது.

# அ.தி.மு.க பொதுக்குழு விவகாரத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தொடர்ந்தது ஓ.பி.எஸ் தரப்பு

**சென்னை, ஜூன் 29-**

அ.தி.மு.க பொதுக்குழு விவகாரம் தொடர்பாக இ.பி.எஸ். தரப்புக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தொடர்ந்தது ஓ.பி.எஸ் தரப்பினர். தீர்மானங்களை நிராகரித்தது மற்றும் அவைத்தலைவர் தேர்வு உள்ளிட்டவை கோர்ட்டை அவமதிக்கும் செயல் என ஓ.பி.எஸ் தரப்பு குற்றம் சாட்டியுள்ளது.

அ.தி.மு.க பொதுக்குழு கூட்டம் கடந்த 23-ம் தேதி சென்னை வானகரத்தில் நடைபெற்றது. இதில் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் ஒப்புதல் அளித்த 23 தீர்மானங்களை தவிர வேறு தீர்மானங்கள் நிறைவேற்றக்கூடாது என சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டிருந்தது. பின்னர் நடைபெற்ற பொதுக்குழுவில், 23 தீர்மானங்களும் நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மேலும், அ.தி.மு.க அவைத்தலைவராக தமிழ்மகன் உசேன் தேர்ந்தெடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அடுத்த பொதுக்குழு வரும் ஜூலை 11ல் நடைபெறும் என தமிழ்மகன் உசேன் தெரிவித்தார்.

தீர்மானங்களை நிராகரித்தது மற்றும் அவைத்தலைவர் தேர்வு உள்ளிட்டவை கோர்ட்டை அவமதிக்கும் செயல் என ஓ.பி.எஸ் தரப்பு குற்றம் சாட்டியது. இந்த நிலையில், இது தொடர்பாக சென்னை ஐகோர்ட்டில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்துள்ளது. அ.தி.மு.க பொதுக்குழு உறுப்பினர் சண்முகம் கோர்ட் அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்தார். இந்த வழக்கு நீதிபதிகள் துரைசாமி, சுந்தர் மோகன் அமர்வில் விசாரணைக்கு வர உள்ளதாக கூறப்படுகிறது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க...



தற்காலிக ஆசிரியர் நியமனம் எனும் முடிவை தமிழக அரசு உடனடியாக கைவிட்டு, தி.மு.க எதிர்க்கட்சியாக இருந்தபோது கொடுத்த வாக்குறுதியின் படி, ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களை உடனடியாக பணி நியமனம் செய்ய வேண்டும்.

- கமல்ஹாசன்




தமிழகத்தில் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டிய சமூகத்தீமைகள் இன்னும் ஏராளமாக உள்ளன. அதில் ஆன்லைன் சூதாட்டமும் ஒன்று. ஆன்லைன் சூதாட்டத் தடை சட்டத்திற்கு தமிழக கவர்னர் உடனடியாக ஒப்புதல் அளிப்பார் என்று உறுதியாக நம்புகிறேன்.

- அன்புமணி



பா.ஜ.க.வின் வெறுப்பு, மத வெறி மற்றும் பொய்களை அம்பலப்படுத்தும் ஒவ்வொரு நபரும் அவர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கிறார்கள். உண்மையின் ஒரு குரலைக் கைது செய்வது, இன்னும் ஆயிரம் பேரை எழுப்பும். கொடுங்கோன்மை மீது சத்தியம் எப்போதும் வெற்றி பெறும்.

- ராகுல் காந்தி



இந்திய நிலத்தை சீன நாடு ரகசியமாக அத்துமீறி ஆக்கிரமித்து வருவதால், எல்லையில் கவனம் செலுத்தி சீன ஆக்கிரமிப்பை பிரதமர் மோடி தடுக்க வேண்டும். இதற்கு யார் காரணம் என்று காங்கிரஸ் மற்றும் பா.ஜ.கவை கேட்க விரும்புகிறேன்.

- அசாதுதீன் ஒவைசி

# கலெக்டர் ஜெ. மேகநாதரெட்டி தலைமையில் மாவட்ட அளவிலான பாதுகாப்பு குழுக்கூட்டம்



**விருதுநகர், ஜூன் 29-**
விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட அளவிலான பாதுகாப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெ.மேகநாதரெட்டி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கூறியதாவது. விருதுநகர் மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் பட்டாசு உற்பத்தி ஆலைகளில் உச்சநீதிமன்றம் தீர்ப்பில் தெரிவித்துள்ளவாறு, பேரியம் உப்பு கலந்து தயார் செய்யப்பட்ட பட்டாசுகள் மற்றும் சரவெடி போன்ற பட்டாசுகளை தயாரித்தல், சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகளைத் தடுக்கும் பொருட்டு, மாவட்ட நிர்வாகத்தால் பட்டாசு உற்பத்தி ஆலைகளை தொடர் ஆய்வு செய்ய வருவாய்த்துறை, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் ஆகிய துறைகளை உள்ளடக்கிய ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, மாவட்டத்தில் இயங்கிவரும் பட்டாசு உற்பத்தி ஆலைகளில் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி படைக்கலச் சட்ட உரிமத்தின் மீதான தற்காலிக இடைநிறுத்த ஆணைகள் விலக்கி ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், விருதுநகர் மாவட்டத்தில் இயங்கிவரும் பட்டாசு ஆலைகளில் குழந்தைத் தொழிலாளர் (18 வயதிற்குட்பட்ட) இருப்பினும், பட்டாசு தொழிற்சாலைகளில் இரவு நேரங்களில் பணிபுரியும் பட்டாசு ஆலைகள் மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளிலேயே இரவு நேரங்களில் தொழிலாளர்கள் தங்கி இருந்தாலும் உரிமம் நிரந்தரமாக ரத்து செய்யப்படும். இதை தடுக்கும் பொருட்டு இரவு நேரங்களில் ஆய்வுக்குழு அமைக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். இனி வரும் காலங்களிலும், மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பினை செயல்படுத்தும் விதமாக ஆய்வுக் குழுக்களின் மூலமாக தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விதிமீறல்களில் ஈடுபடுவோர் மீது விதிமுறைகளின்படி கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெ.மேகநாதரெட்டி தெரிவித்தார். இக்கூட்டத்தில், மா வட்ட காவல் கண்காணிப்பாளர் மனோகர். மாவட்ட வருவாய் அலுவலர் இரா.மங்களராமசுப்பிரமணியன், சார் ஆட்சியர் பிருத்திவிராஜ். மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சொத்தை பிரித்து தர மறுத்ததால் ஆத்திரம்: தந்தையை கொலை செய்த மகனுக்கு ஆயுள்



**ராமநாதபுரம், ஜூன் 29-**
ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அருகே சொத்தை பிரித்து தர மறுத்ததால் தந்தையை கொலை செய்த மகனுக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது.

ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அருகே உள்ளது மூலவயல். இந்த ஊரை சேர்ந்தவர் காளை என்பவரின் மகன் சோலை(வயது74). இவரது மகன் பழனி(48). திருமணமாக மனைவியை பிரிந்து தந்தையின் வீட்டின் அருகில் வீடு பிடித்து வசித்து வந்துள்ளார். தனியாக உள்ள தனக்கு சொத்தை பிரித்து தருமாறு தந்தையிடம் கேட்டு வந்துள்ளார். இதற்கு அவர் மறுத்ததோடு நிலத்தை விற்று செலவு செய்து வந்தாராம். தனக்கு கொடுக்காமல் விற்பனை செய்துவிட்டாரே என்று ஆத்திரமடைந்த பழனி கடந்த 2019-ம் ஆண்டு ஏப்ரல் 5-ந் தேதி தந்தையிடம் கேட்டுள்ளார். அப்போது அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் ஆத்திரமடைந்த பழனி கம்பால் தந்தை என்றும் பாராமல் சரமாரியாக தாக்கினாராம். இதில் படுகாயமடைந்த சோலை ரத்த வெள்ளத்தில் பரிதாபமாக பலியானார்.

இதுகுறித்து சோலையின் அண்ணன் அரசு(76) என்பவர் அளித்த புகாரின் அடிப்படையில் திருவாடானை போலீசார் வழக்குபதிவு செய்து பழனியை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை ராமநாதபுரம் மாவட்ட கோர்ட்டில் நடைபெற்று வந்தது. வழக்கினை விசாரித்த நீதிபதி விஜயா சொத்தை பிரித்து கொடுக்காததால் ஆத்திரத்தில் தந்தையை கொலை செய்த பழனிக்கு ஆயுள்தண்டனையம் ரூ.10 ஆயிரம் அபராதமும் அதனை கட்டத்தவறினால் மேலும் 2 மாதம் சிறைதண்டனையும் விதித்து தீர்ப்பு கூறினார். இந்த வழக்கில் அரசு தரப்பில் வக்கீல் கார்த்திகேயன் ஆஜரானார்.

# ஒட்டன்சத்திரம் நகராட்சியில் நகர் மன்றம் கூட்டம்



**ஒட்டன்சத்திரம், ஜூன் 29-**
திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் நகர் மன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேருந்து நிலையத்தில் நுழைவு கட்டணம் வசூலிக்கும் பணிக்கு ஒப்பந்த பணியாளர் நியமிப்பது, பழனிகவுண்டன்புதூர் மற்றும் சொசைட்டி காலனி பகுதியில் புதிய பாலங்கள் கட்டுவது, புதிய மின் விளக்குகள் அமைத்தல், காப்பிலியப்பட்டி உரக்கிடங்களில் மியாவாக்கி அடர்வனக் காடுகள் அமைத்து பராமரித்தல், கண்காணிப்பு கேமராக்கள் அமைத்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இதில் நகர செயலாரும் நகர்மன்ற துணை தலைவருமான வெள்ளைச்சாமி, நகர் மன்ற தலைவர் திருமலைசாமி, ஆணையாளர் தேவிகா உள்ளிட்ட நகர்மன்ற உறுப்பினர்கள், நகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கொடைக்கானல் அண்ணா நகர் மாரியம்மன் கோவில் திருவிழா



**கொடைக்கானல், ஜூன் 29-**
கொடைக்கானல் அண்ணாநகர் மாரியம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு நேற்று பால்குட விழா நடந்தது.

கடந்த வாரம் மாரியம்மன் கோவில் திருவிழா விமர்சையாக நடைபெற்றது. இந்த திருவிழாவின் தொடர்ச்சியாக நேற்று பால் குட விழா நடந்தது.

முன்னதாக மாரியம்மன் கோவில் பக்தர்கள் டிப்போ பகுதியில் உள்ள காளியம்மன் கோவிலில் இருந்து பால் குடங்களை தலையில் சுமந்தபடி அண்ணாசாலை ஆனந்தகிரி பகுதி வழியாக ஊர்வலமாக அண்ணா நகர் மாரியம்மன் கோவிலை வந்தடைந்தனர். பின்னர் அம்மனுக்கு பாலாபிஷேகம் நடந்தது.

இந்த பால்குட விழாவில் ஏராளமான பக்தர்கள் பால்குடம் எடுத்து தங்களது நேர்த்திக் கடனை செலுத்தினார்கள்.

# திருமலைக்கேணியில் அமாவாசை விழா

**நத்தம், ஜூன் 29-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஆனி மாத சர்வ அமாவாசை பூஜை நடந்தது. இதையொட்டி முருகப் பெருமானுக்கு பால், பழம்,பன்னீர், புஷ்பம்,சந்தனம்,விபூதி, தீர்த்தம் உள்பட 16 வகையான அபிஷேகங்கள், அலங்காரம், பூஜைகள், தீபாராதனைகள் நடந்தது.இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்தும்,வெளி மாவட்டங்களிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் வந்திருந்து சாமி தரிசனம் செய்தனர். மேலும் அருகில் உள்ள காமாட்சி மவுன குருசாமி மடத்திலும் பக்தர்கள் வழிபாடு செய்தனர். அவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## இந்தியாவில் மாஸ்டர் கார்ட் அதன் சைபர் செக்யூரிட்டி வழங்குவதற்கு சாஃப்ட்செல் உடன் சேனல் பார்ட்னராக இணைகிறது

**சென்னை, ஜூன் 29-**
நாடு முழுவதும் உள்ள சாஃப்ட்செல் வாடிக்கையாளர்களுக்கு மாஸ்டர்கார்டின் ரிஸ்க் ரீகான், மூன்றாம் தரப்பு சைபர் ரிஸ்க் மேலாண்மை தளத்தை வழங்குவதற்காக, மும்பையைத் தலைமையிடமாகக் கொண்ட ஐடி சேவை வழங்குநர் மற்றும் அமைப்புகளை ஒருங்கிணைக்கும் நிறுவனமான சாஃப்ட்செல் டெக்னாலஜி குளோபல் ப்ரைவேட் லிமிடெட்(சாஃப்ட்செல்) உடன் மாஸ்டர்கார்ட் ஒரு முக்கிய இணைப்பை அறிவித்துள்ளது. இந்த இணைப்பின் ஒரு பகுதியாக, சாஃப்ட்செல் ஆனது பல்வேறு தொழில்களில் உள்ள அதன் வாடிக்கையாளர்களுக்கு ரிஸ்க் ரீகானை அறிமுகப்படுத்தும், மேலும் வலுவான டிஜிட்டல் பாதுகாப்பு கட்டமைப்பை செயல்படுத்த அவர்களுக்கு உதவும். முக்கிய டொமைன்களில் 200 க்கும் மேற்பட்ட சான்றளிக்கப்பட்ட நிபுணர்களுடன், வணிகங்கள் தங்கள் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் தங்கள் ஐ.டி. உத்தியை நெறிப்படுத்த உதவும் ஆலோசனை அடிப்படையிலான அணுகுமுறையை சாஃப்ட்செல் வழங்கும். உலகளவில் 2023 ஆம் ஆண்டுக்குள், ஒவ்வொரு 11 வினாடிக்கும் ஒரு ரான்சம்வேர் தாக்குதலுக்கு ஒரு வணிகம் பலியாகி விடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது கூடுதலாக, 2021 ஆம் ஆண்டில் சைபர் தாக்குதல் என்று வரும்போது ஆசியாவில் அதிகம் பாதிக்கப்பட்ட முதல் மூன்று நாடுகளில் இந்தியாவும் இருந்துள்ளது. இது குறித்து சாஃப்ட்செல் குளோபல் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் எம்.டி சுனில் தலால் கூறியதாவது, அதிகரித்து வரும் சைபர் செக்யூரிட்டி அபாயங்களிலிருந்து தங்கள் வணிகங்களைப் கூடுதல் பாதுகாப்பில் வைத்திருக்க பாதுகாப்பைத் தேடும் வாடிக்கையாளர்களுக்கு மாஸ்டர் கார்ட் உடன் இணைந்து ரிஸ்க் ரீகானை கொண்டு செல்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இணைய அச்சுறுத்தல்களைத் தடுக்க ரிஸ்க் ரீகான் பற்றிய நடைமுறைகள் மூலம் சந்தையைப் பற்றி அறிந்து கொள்ள, மாஸ்டர் கார்ட் உடன் இணைந்து பணியாற்ற நாங்கள் எதிர்நோக்குகிறோம் என்று கூறினார்.

## பா.ஜ.க. தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடக பிரிவு கூடுதல் மாநில செயலாளராக விஷ்ணு பிரசாத் நியமனம்



**மதுரை, ஜூன் 29-**
தமிழ்நாடு பா.ஜ.க. தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடக பிரிவு மாநில செயலாளராக மதுரையைச் சேர்ந்த பா.ஜ.க. பிரமுகர் விஷ்ணு பிரசாத் நியமிக்கப்பட்டுள்ளார்.இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பை மாநில தலைவர் சி.டி.ஆர். நிர்மல்குமார் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து விஷ்ணு பிரசாத் கூறுகையில்,

பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் நல்லாசியுடன் தமிழ்நாடு பா.ஜ.க.தலைவர் அண்ணாமலை அவர்களின் அறிவுறுத்தல் பேரில் , தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடக பிரிவு மாநில செயலாளராக என்னை நியமனம் செய்வதற்கு பரிந்துரை செய்து, உறுதுணையாக இருந்த மாநில அமைப்பு பொது செயலாளர் கேசவ விநாயகன், மதுரை மாவட்ட பா.ஜ.க. தலைவர் டாக்டர் சரவணன் மற்றும் கோட்ட பொறுப்பாளர் கதலி பெருமாள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடக பிரிவு மாநில தலைவர் சி.டி.ஆர். நிர்மல்குமார் ஆகிய அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

## தஞ்சாவூர் டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனையில் 57 வயது நபருக்கு விழிப்படிக - விழித்திரை அறுவைசிகிச்சை

**தஞ்சாவூர், ஜூன் 29-**
இதய செயல்பாட்டில் பாதிப்பு என்ற கடந்தகால வரலாறு கொண்ட 57 வயதான ஒரு நபருக்கு செய்யப்பட்ட விழிப்படிக - விழித்திரை அறுவைசிகிச்சை (VR) வெற்றி பெற்றிருப்பதை டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனை, தஞ்சாவூர் பெருமிதத்துடன் அறிவித்திருக்கிறது. தஞ்சாவூர் டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் ஆகிய இரண்டின் மருத்துவ வரலாற்றிலும் இந்த அறுவைசிகிச்சை முதன்முறையாக நிகழ்த்தப்பட்டிருக்கிறது. தஞ்சாவூரைச் சேர்ந்த விஜயகுமார் என்ற நபருக்கு 2022 மார்ச் மாதத்தில் அவரது இடது கண்ணில் பார்வைத்திறனிழப்பு ஏற்பட்டது. விஜயகுமாரின் மகன் ஒரு மருத்துவராக இருக்கின்ற நிலையில் இப்பிரச்சனையின் தீவிரத்தை நன்கு புரிந்துகொண்ட அவர், அதற்கு அடுத்த நாளே இந்த விழிப்படிக - விழித்திரை அறுவைசிகிச்சை (VR) செய்து கொள்வதற்காக டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனையை அணுகினார். இந்த அறுவைசிகிச்சைக்குப் பிறகு CFCF - ன் V/A என்ற அறுவைசிகிச்சைக்கு முந்தைய நிலையிலிருந்து இவரது பார்வைத்திறன் 6/9 என்பதாக முன்னேற்றம் கண்டிருக்கிறது.

இது குறித்து தஞ்சாவூர் - டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனையின் பிராந்திய மருத்துவ இயக்குனர் டாக்டர் டி.சாந்தி கூறுகையில், விஜயகுமார் எங்களிடம் சிகிச்சைக்கு வந்தபோது அவரது இதய பாதிப்பின் காரணமாக அவரது விழித்திரையில் ஏற்பட்டிருந்த சேதத்தின் கடுமையான தீவிரத்தைக்கூட அறிந்தவராக இருக்கவில்லை. ஒரு முழுமையான ஆய்வை மேற்கொண்டதற்குப் பிறகு, அவரது பார்வைத்திறனை அவர் திரும்பவும் பெறுவார் என்ற உத்தரவாதத்தையும், வாக்குறுதியையும் நாங்கள் அவருக்கு வழங்கினோம் என்றார். சிகிச்சைக்கு வந்ததற்கு அடுத்த நாளிலேயே இந்த அறுவைசிகிச்சை நடைபெற்றது. ஏறக்குறைய 75 நிமிடங்கள் நடைபெற்ற இந்த அறுவைசிகிச்சையில் கசிவுகள் ஏதும் இல்லாததை நாங்கள் உறுதி செய்தோம்; சிலிக்கான் ஆயில் சீலண்ட் மிக உறுதியாக பொருத்தப்பட்டது. சிக்கலான கண் அறுவைசிகிச்சைகளை வெற்றிகரமாக செய்யக்கூடிய உலகத் தரத்திலான மருத்துவமனையை தஞ்சாவூரில் நாங்கள் கொண்டிருக்கிறோம்.

எனவே, இனிமேலும் சிக்கலான கண் அறுவைசிகிச்சைகளுக்காக மதுரைக்கோ அல்லது சென்னைக்கோ எவரும் பயணிக்க வேண்டியதில்லை என்று டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனையின் மருத்துவ சேவைகளுக்கான மண்டல தலைமை அதிகாரி டாக்டர் ஆர்.கலாதேவி கூறினார்.

## நத்தம் அருகே போக்சோ சட்டத்தில் வாலிபர் கைது

**நத்தம், ஜூன் 29-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே குடகிப்பட்டி கிராமம் குப்பிலிபட்டியை சேர்ந்தவர் வெங்கடேசன்(23).இவர் அதே பகுதியில் 17 வயது சிறுமியை ஆசை வார்த்தை கூறி கர்ப்பமாக்கி உள்ளார்.

இதுகுறித்து சிறுமியின் தாயார் நத்தம் போலீசில் புகார் செய்தார்.அதன் பேரில் விசாரணை செய்த நத்தம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜசேகர் வெங்கடேசனை போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து கைது செய்தார்.

# போகலூர் வட்டாரத்தில் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்ட பணிகள்: வேளாண்மை இணை இயக்குனர் டாம். பி. சைலஸ் ஆய்வு



**பரமக்குடி, ஜூன் 29-**
போகலூர் வட்டாரத்தில் 2021-22 ஆண்டிற்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் அ.புத்தூர்,மென்னந்தி , நாகாச்சி, எட்டிவயல் மற்றும் போகலூர் ஆகிய கிராம பஞ்சாயத்துக்கள் தேர்வு செய்யப்பட்டு அனைத்து பஞ்சாயத்துகளிலும் 15 ஏக்கர் உள்ள தரிசு நில தொகுப்பு தேர்வு செய்யப்பட்டு ஆழ்குழாய் நீரினை பயன்படுத்துவோர் சங்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் டாம்.பி.சைலஸ் அவர்கள் அ.புத்தூர் ,போகலூர் மற்றும் எட்டிவயல் ஆகிய பஞ்சாயத்துக்களில் தேர்வு செய்யப்பட்ட தரிசு நில தொகுப்பினை ஆய்வு செய்தார். தரிசு நில தொகுப்பிலுள்ள விவசாயிகளும் கருவேல் மரங்களை விரைவில் அகற்றி சுத்தம் செய்து நிலத்தை சமப்படுத்தி தரிசு நிலங்களை சாகுபடி நிலங்களாக மாற்ற வேண்டும் என ஆலோசனை வழங்கினார். மேலும் இத்தரிசு தொகுப்பில் ஆழ்குழாய் கிணறு அமைய உள்ள இடத்தையும் ஆய்வு செய்தார். மேற்கண்ட நான்கு கிராம பஞ்சாயத்துகளுக்கு தார்பாலின், கைத்தெளிப்பான், விசைத் தெளிப்பான், ஜிப்சம், சிங்க் சல்பேட் 50 சதம் மானியத்தில் போகலூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இதனை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும் என ஆலோசனைகள் வழங்கினார். போகலூர் வட்டாரத்தில் 2022-23 ம் ஆண்டிற்கு முத்துவயல், கும்முகோட்டை, கவிதைகுடி ,மஞ்சூர், மஞ்சக்கொல்லை, கருத்தனேந்தல் மற்றும் பாண்டிகண்மாய் கிராம பஞ்சாயத்துக்கள் தேர்வு செய்யப்பட்டு ஒருங்கிணைப்பு அலுவலர்களால் தரிசு நில தொகுப்பு தேர்வு செய்யப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு நாகராஜன் மற்றும் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் கன்சல்டன்ட் ஸ்ரீதர், போகலூர் வேளாண்மை உதவி இயக்குனர் இராஜேந்திரன் ,வேளாண்மை அலுவலர் சுமித்ரா, துணை வேளாண்மை அலுவலர் சக்திவேல், உதவி வேளாண்மை அலுவலர்கள் ஜெய்சங்கர், ஆனந்த் மற்றும் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தவறிவிட்டது

நான் லாலாகுடியிருப்பில் வீடு மாற்றம் செய்யும் போது எங்களது வீட்டுப்பத்திர அசல் ஆவண எண்.1475/2004 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.
கோமதி
3/144 வடக்குத்தெரு,
லாலாகுடியிருப்பு
செங்கோட்டை தாலுகா
தென்காசி-627813

---

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம். சங்கரன்கோவில்,**
ஆ. சண்முகத்தாய்,
க.பெ. ஆறுமுகம்
க.எண். 56, திண்டு கொம்பு,
மைக்கேல் கிரி,
காந்தலூர் ஊராட்சி,
தேவிகுளம் வட்டம்,
இடுக்கி மாவட்டம்,
கேரளா மாநிலம்,
மனுதார்,
அறிவிப்பு
எனது தாயார் கோமதியம்மாள், க.பெ. சுப்பையா , என்பவர் கடந்த 15.06.2007 அன்று 1/179, பிள்ளையார் கோவில் தெரு, அருணாசலபுரம் (எ) மாயம்பாறை, நடுவக்குறிச்சி மைனர் கிராமம், சங்கரன்கோவில் வட்டம், என்ற முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 7 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
ஆ. சண்முகத்தாய் ,
மைக்கேல் கிரி.

---

**முதன்மை மவாட்ட உரிமையியல் நீதிமன்றம். சங்கரன்கோவில்,**
I.A. No. 1/2021 in
O.S. No. 282/2015
சைலா … .. மனுதார்/வாதி
எதிர்,
1.கோமதி, க.பெ.லேட்.ஜெயராம், க. எண். 6/8, நடுத்தெரு, தெற்கு அய்வாய்புலிப்பட்டி கிராமம், வெள்ளாகுளம், குருவிகுளம் அஞ்சல், திருவேங்கடம் வட்டம்,
2. ஜெயக்குமார், த.பெ.ராமசுப்பு நாயக்கர், க.எண். 6/4, நடுத்தெரு, தெற்கு அய்வாய்புலிப்பட்டி கிராமம், வெள்ளாகுளம், குருவிகுளம் அஞ்சல், திருவேங்கடம் வட்டம்,
எதிர்மனுதாரர்கள்/1,3 பிரதிவாதிகள்,
அறிவிப்பு,
இந்த மனுதார் இந்த எதிர்மனுதார்கள் மற்றும் ஷை நம்பர் வழக்கின் 2ம் பிரதிவாதி மீதும் ஷை நம்பர் வழக்கினை தாக்கல் செய்து அதில் சமூகம் மன்றும் இந்த மனுதாருக்கு சாதகமாக பிறப்பித்த முதல்நிலை தீர்ப்பானையை அனுசரித்து இறுதிநிலை தீர்ப்பானை பிறப்பிக்க வேண்டி ஷை நம்பர் மனுவினை தாக்கல் செய்துள்ள நிலையில் இந்த எதிர்மனுதார்கள் 04.07.2022 தேதியன்று காலை 10.00 மணிக்கு சமூகம் மன்றத்தில் ஆஜராக வேண்டியது, தவறும் பட்சத்தில் இந்த எதிர் மனுதார்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
நீதிமன்ற உத்தரவுப்படி,
A.இசக்கிமாரிமுத்து., பி.ஏ.,பி.எல்.,
S.உமாசுந்தரி., எம்.பி.ஏ., பி.எல்.,
வழக்கறிஞர்கள், சங்கரன்கோவில்.

---

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம். சங்கரன்கோவில்,**
ஆ. சண்முகத்தாய்,
க.பெ. ஆறுமுகம்
க.எண். 56, திண்டு கொம்பு,
மைக்கேல் கிரி,
காந்தலூர் ஊராட்சி,
தேவிகுளம் வட்டம்,
இடுக்கி மாவட்டம்,
கேரளா மாநிலம்,
மனுதார்
அறிவிப்பு.
எனது தந்தை சுப்பையா , த.பெ. இருளன் என்பவர் கடந்த 24.08.2003 அன்று 1/179, பிள்ளையார் கோவில் தெரு, அருணாசலபுரம் (எ) மாயம்பாறை, நடுவக்குறிச்சி மைனர் கிராமம், சங்கரன்கோவில் வட்டம், என்ற முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 7 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
ஆ. சண்முகத்தாய் ,
மைக்கேல்கிரி.

---

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம். சங்கரன்கோவில்,**
த. முத்துப்பாண்டி,
த.பெ. தங்கவேல் நாயக்கர்
க.எண். 3/57, தெற்குதெரு,
வரகுணராமபுரம், பெருமாள்பட்டி கிராமம், சங்கரன்கோவில் வட்டம்,
மனுதார்,
எதிர்,
1.வட்டாட்சியர்,
சங்கரன்கோவில்,
2. சார்பதிவாளர்,
கரிவலம்வந்தநல்லூர்,
எதிர்மனுதாரர்,
அறிவிப்பு.
எனது தந்தை தங்கவேல் நாயக்கர், த.பெ. கருப்பசாமி நாயக்கர் , என்பவர் கடந்த 07.06.2001 அன்று மேற்படி என்ற முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 7 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
த. முத்துப்பாண்டி ,
வரகுணராமபுரம்.

---

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம். சங்கரன்கோவில்,**
பெ. காளிச்சாமி,
த.பெ. பெருமாள்
க.எண். 3/140, வடக்குதெரு,
நெடுங்குளம், தெற்கு
சங்கரன்கோவில் கிராமம்,
சங்கரன்கோவில் வட்டம்,
மனுதார்,
எதிர்,
1.வட்டாட்சியர்,
சங்கரன்கோவில்,
2. சார்பதிவாளர்,
சங்கரன்கோவில்,
எதிர்மனுதாரர்,
அறிவிப்பு
எனது தங்கை சண்முகத்தாய், த.பெ. பெருமாள் , என்பவர் கடந்த 15.02.1995 அன்று மேற்படி என்ற முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 7 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
பெ. காளிச்சாமி ,
நெடுங்குளம்.

---

**தென்காசி முதன்மை சார்பு நீதிமன்றம்**
I.A. No: 27/2015 in
O.S No.94/2013
காளியப்பன் … மனுதார்/வழக்கர்
- எதிர் -
கனியம்மாள் … 2ம் எதிர்மனுதாரர்/ 2ம் எதிர்வழக்கர்
வழக்கர் பக்கம் தாக்கல் செய்யும் அறிவிப்பு
மேற்படி எண் அசல் வழக்கில் தென்காசி தாலுகா, திப்பணம்பட்டி கிராமம், சுப்பனூர் நடுத்தெருவில் வசித்து வரும் லேட்.லிங்கநாடார் மனைவி 74 வயதுள்ள கனியம்மாள் மற்றும் இருவர் மீது கடையநல்லூர், மாவடிக்கால், பெரியார் தெரு, முத்தையா குமாரர் காளியப்பன் தாக்கல் செய்துள்ள I.A. No: 27/2015 in O.S No.94/2013.-ல் 11.07.2022 –ல் 2ம் எதிர்மனுதார் / எதிர்வழக்கர் ஆஜராக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வாய்தா அன்று சமூகம் நீதிமன்றத்தில் 2ம் எதிர்மனுதாரர் / 2ம் எதிர்வழக்கராகிய தாங்கள் காலை 10.30 மணியளவில் நேரிலோ, வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி ஆட்சேபணை இருந்தால் தெரிவித்துக் கொள்ள வேண்டியது. அல்லாதவரை தாங்கள் மீது ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது.
நீதிமன்ற உத்திரவுப்படி
S.சங்கரசுப்பிரமணியன் B.Sc., B.L.,
வழக்கறிஞர்,
தென்காசி

---

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**
வேல்முருகன்,
தபெ. குருசாமி நாடார்,
கஎண்: 34, பத்திரகாளியம்மன் கோவில்தெரு, மந்திதோப்பு கிராமம், கோவில்பட்டி தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்,
மனுதார்
எதிர்
வட்டாட்சியர், கோவில்பட்டி.
சார்பதிவாளர், கோவில்பட்டி.
எதிர்மனுதார்கள்
அறிவிப்பு
எனது சின்ன பாட்டி மீனாட்சியம்மாள் என்பவர் கடந்த 11.07.1998. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்துமூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்து கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கபடுகிறது.
இப்படிக்கு
வேல்முருகன்,
மனுதார்.

---

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**
வேல்முருகன்,
தபெ. குருசாமி நாடார்,
கஎண்: 34, பத்திரகாளியம்மன் கோவில்தெரு, மந்திதோப்பு கிராமம், கோவில்பட்டி தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்,
மனுதார்
எதிர்
வட்டாட்சியர், கோவில்பட்டி.
சார்பதிவாளர், கோவில்பட்டி.
எதிர்மனுதார்கள்
அறிவிப்பு
எனது சின்ன தாத்தா அருணாச்சல நாடார் என்பவர் கடந்த 10.05.1996. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்துமூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்து கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கபடுகிறது.
இப்படிக்கு
வேல்முருகன்,
மனுதார்.

---

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**
பெருமாள்ராஜன், தபெ. கிருஷ்ணன்,
கஎண்: 127D, புதுக்கிராமம்
மெயிண்ரோடு,
கோவில்பட்டி டவுண்,
தூத்துக்குடி மாவட்டம்,
மனுதார்
எதிர்
வட்டாட்சியர், கயத்தார்.
சார்பதிவாளர், கயத்தார்.
எதிர்மனுதார்கள்
அறிவிப்பு
எனது தம்பி சித்தப்பாவின் மகன் கா. செந்தில் என்பவர் கடந்த 23.01.1979. அன்று கஎண்: 1G, கருப்பசாமி கோவில்தெரு, கயத்தார், கயத்தார் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம், என்ற முகவரியில் வைத்து பிறந்ததை மேற்படி எதிர்மனுதாரரின் பிறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்துமூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்து கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கபடுகிறது.
இப்படிக்கு
பெருமாள்ராஜன்,
மனுதார்.

# கடையத்தில் செல்லம்மா பாரதி சிலை: சபாநாயகர் மு.அப்பாவு திறந்து வைத்தார்



**தென்காசி,ஜூன்.29-**

தென்காசி மாவட்டம் கடையத்தில் செல்லம்மா பாரதி 125வது மணவிழா மற்றும்; சேவாலயாவின் 34வது ஆண்டு விழாவினை முன்னிட்டு தமிழக சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு ரூ.3.50 கோடி மதிப்பிலான செல்லம்மா பாரதி கற்றல் மையத்தையும் மற்றும் செல்லம்மா பாரதி சிலையையும் திறந்து வைத்தார். தென்காசி மாவட்டம் கடையத்தில் நேற்று செல்லம்மா பாரதி 125-வது மணவிழா மற்றும் சேவாலயாவின் 34வது ஆண்டு விழாவினை முன்னிட்டு பொது நூலக இயக்குநர் இளம் பகவத் தலைமையில் கலெக்டர் ஆகாஷ் , தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனிநாடார் ஆகியோர் முன்னிலையில் தமிழக சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு செல்லம்மா பாரதி கற்றல் மையத்தையம் மற்றும் செல்லம்மா பாரதி சிலையையும் திறந்த வைத்து பேசியதாவது

தமிழக முதலமைச்சர் அறிவுறுத்தலின் படி இன்றைய தினம் பெண் விடுதலைக்காக பாடுபட்ட பாரதியின் துணைவியார் செல்லம்மா பாரதியின் சிலையையும் மற்றும் மைய நூலகமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பாரதியார் சிறுவயது திருமணத்தை ஏற்கவில்லை எட்டாயபுரத்தில் பிறந்த பாரதிக்கு பாரதியார் என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களல் முதன்மையாக விளங்கினார்.

சுதந்திரம் பெற வேண்டும் என்ற சிந்தனை உள்ளவர் பல்வேறு மொழிகளை கற்றுக் கொண்ட பாரதிக்கு இவ்வுலகில் யாம் அறிந்த மொழிகளிலே சிறந்த மொழி தமிழ் மொழி என்றார். உலகில் தோன்றிய மொழிகளில் சிறந்த மொழி தமிழ் மொழி பாரதி ஆணும் பெண்ணும் சமம் என்ற கோட்பாட்டிற்கு குரல் கொடுத்தவர். பாரதி இந்த உலகம் இருக்கும் வரை பாரதியின் பெருமை நிலைத்திருக்கும்

பாரதி செல்லம்மா கற்றல் மையம் மற்றும் சிலை திறப்பு விழாவில் முக்கிய பங்கு வகித்தவர் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் பரந்தராமன் ஆவார் சேவாலயாவில் படித்த காரணத்தினால் பாரதியார் மேல் உள்ள பற்றினால் அம்முயற்சியை எடுத்துள்ளார். சேவாலயாவில் சுமார் 2000 க்கும் மேற்பட்ட பல்வேறு பகுதிகளைச் சார்ந்த குழந்தைகள் படிக்கின்றனர். பாரதி அடக்குமுறையைத் தாண்டி அந்தக் காலத்தில் ஜெர்மனி நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சன்மானமாக வழங்கிய பணத்தினை நண்பர்களுக்கு வழங்கியுள்ளார்.

நாடு முழுவதும் அவரின் பெருமை நிலைத்திருக்கும் வகையில் பல்வேறு நிகழ்வுகளை செய்துள்ளார். கலைஞர் எட்டாயபுரத்தில் உள்ள பாரதியாரின் இல்லத்தினை அரசு உடைமாக்கி நினைவு இல்லமாக்கினார். அப்பகுதியில் மணிமண்டபத்தையும் கட்டியுள்ளார். தமிழக முதலமைச்சர் பாரதியாரின் நினைவுநாள் மகாகவி நினைவுதினம் என்று போற்றப்படும் என அறிவித்துள்ளார்.

பாரதி குறித்து ஆய்வுக் கட்டுரை இயற்றும் தமிழறிஞர்களை கவுரவித்து பொற்கிழி வழங்க 10 கோடி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார். முதலமைச்சர் மக்களுக்குத் தேவையான நல உதவிகள் அனைத்தையும் வழங்கி சிறந்த முதலமைச்சராக விளங்குகிறார் அவரது ஆட்சியை ஆங்கில இந்தி ஊடகங்கள் புகழாரம் சூட்டியுள்ளனர். கடையம் இரயில் நிலையத்தில் பாரதியாரின் வாழ்க்கை வரலாறு குறித்து பதாதை வைக்க வேண்டும் என்ற சேவாலயாவின் கோரிக்கையினை முதலமைச்சர் கவனத்திற்கு எடுத்துச் சென்று விரைவில் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்தார்

கலெக்டர் ஆகாஷ் பேசியதாவது

மகாகவி பாரதி ஒரு எழுத்தாளர், கவிஞர் இந்திய சுதந்திர போராட்டத்திற்கு போராடிய ஒருவர் மட்டுமில்லை தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர்கள், பெண்கள், கஷ்டங்களை அனுபவிப்பவர்களுக்கு ஆதரவாகவும், உறுதுணையாகவும் இருந்த ஒரு பெரும் புரட்சியாளர் நவீன தமிழ் இலக்கிய கவிதையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பாளராக இருந்தவர் செல்லம்மா பாரதி அந்த கவிதைக்கு உத்வேகம் அளித்தவர் இதை நாம் எப்போதும் நினைவில் வைக்க வேண்டும் இந்த நல்ல நிகழ்ச்சியில் பாரதியாரும் செல்லம்மா பாரதியாரும் சமூகத்திற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் தந்த பங்களிப்பை நாம் நினைவில் கொள்ள வேண்டும் அதனை சாத்தியமாக்கிய இந்நிகழ்ச்சியின் அமைப்பாளர்களுக்கு சேவாலயாத்திற்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

இவ்விழாவில் நிறுவனர் மற்றும் நிர்வாக அறங்காவலர் சேவாலயா முரளிதரன், முன்னாள்; தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் குமரி அனந்தன், தெற்கு மாவட்ட செயலாளர் சிவ பத்மநாதன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் தமிழ்செல்வி போஸ், கடையம் யூனியன் சேர்மன் செல்லம்மாள் கோவிந்தபேரி பஞ்சாயத்து தலைவர் பாண்டியன், ஏ.பி.நாடானூ{ர் பஞ்சாயத்து தலைவர் அழகுத்துறை (எ) அருட்செல்வம் கீழப்பாவூர் பஞ்சாயத்து தலைவர் காவேரி பாரதியார் வாரிசுதாரர் உமாபாரதி ஆகியோர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரிபூம்புகார்கப்பல்போக்குவரத்துகழகத்தினைசட்டப்பேரவைபொதுகணக்குகுழுத்தலைவர்கு.செல்வபெருந்தகை பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது கலெக்டர் அரவிந்த், பொது கணக்கு குழு உறுபபினர்கள் காந்திராஜன், கார்த்திகேயன், சிந்தனை செல்வன், வேல்முருகன், மாவட்ட வருவாய் அலுவலர் சிவப்பிரியா உட்பட பலர் உடனிருந்தனர்.



பாளையங்கோட்டை தேய்த்தான் குளம் புதிய பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு கொரானா விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருநெல்வேலி மாநகர காவல் துணை ஆணையர் ஸ்ரீனிவாசன் முகக்கவசங்களை வழங்கினார்

## கோவில்பட்டி புற்று கோவிலில் ஆனி அமாவாசை சிறப்புப் பூஜை

**கோவில்பட்டி ஜூன் 29**

கோவில்பட்டி வீரவாஞ்சி நகர் சங்கரலிங்க சுவாமி சமேத சங்கரேஸ்வரி அம்பாள் புற்றுக்கோவிலில் ஆனி அமாவாசை சிறப்புப் பூஜை நடைபெற்றது .

இதனையொட்டி காலை 9.00 மணிக்கு கணபதி பூஜையுடன் தொடங்கி ஸ்தபன கும்ப கலச பூஜை யாகசாலை பூஜையில் கணபதி ஹோமம் நவக்கிரக ஹோமம் மூலமந்திர ஹோமம் பூர்ணாகுதி தீபாராதனை நடைப்பெற்றது. பிறகு சசங்கரேஸ்வரி அம்மனுக்கு மஞ்சள், பால், தேன், விபுதி, பன்னீர், சந்தனம் போன்ற 18 வகையான சிறப்பு அபிஷேக அலங்கார திபாராதனை நடைபெற்றது. பூஜைகளை சுப்பிரமணிய அய்யர் செய்து வைத்தார். இவ்விழாவில் சுற்று வட்டார மக்கள் திரளாக கலந்து கொண்டு முககவசம் அணிந்து சமூக இடைவெளி கடைப்பிடித்து சுவாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு இனிப்பு பிரசாதமாக வழங்கப்பட்டது.

மழைநீர்
உயிர்நீர்



தென்காசி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஆகாஷ் தலைமையில் நடைபெற்றது. கலெக்டர் விவசாயிகளுக்கு நகராட்சி அலுவலகம் மூலம் வழங்கப்பட்ட இயற்கை உரப்பைகளை வழங்கினார். மேலும் விவசாயிகளின் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டு விரைவாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெய்னுலாப்தீன், வேளாண்மை இணை இயக்குநர் தமிழ்மலர், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சுரேஷ் உட்பட அனைத்துறை அலுவலர்களும் கலந்து இருந்தனர்.



திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் இந்து முன்னணி மாநில தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் சுவாமி தரிசனம் செய்தார்.

## தென்காசி மாவட்டத்தில் நடப்பு பருவத்தில் அரவைக் கொப்பரை கொள்முதல்

**தென்காசி,ஜூன்.29-**

மத்திய அரசின் ஆதார விலை திட்டத்தின் கீழ் 2021-22 ஆம் ஆண்டு பருவத்தின் அரவைக்கொப்பரை கொள்முதல் தென்காசி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் வளாகத்தில் 31.07.2022 வரை விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.அரவைக் கொப்பரை அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதார விலையான ரூ.10590 (குவிண்டாலுக்கு) கொள்முதல் செய்யப்படும். கொள்முதல் செய்யப்படும் அரவைக் கொப்பரைக்கான தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும் ஒரு விவசாயிடம் ஒரு ஏக்கருக்கு 200 கிலோ மட்டுமே கொள்முதல் செய்யப்படும். கொள்முதல் செய்யப்படும் அரவைக் கொப்பரை அரசு நிர்ணயித்துள்ள நியாயமான சராசரி தரத்தின் படி இருத்தல் வேண்டும்.

மேலும் இத்திட்டத்தில் பயன்பெற விவசாயிகளின் அடங்கலில் மேற்படி சாகுபடி பரப்பு இடம் பெற்றிருக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பயன்பெற விவசாயிகள் சிட்டா, அடங்கல். ஆதார் அடடை, புகைப்படம் மற்றும் வங்கிக்கணக்கு விவரத்துடன் பாவூர்ச்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் மற்றும் வேளாண் வணிகத்துறை அலுவலர்களை தொடர்பு கொள்ளுமாறு தென்காசி மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் தெரிவித்துள்ளார்

## அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மாணவர் சேர்க்கை

**தென்காசி,ஜூன்.29-**

தென்காசி, கடையநல்லூர், வீரகேரளம்புதுர் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் நடப்பு ஆண்டிற்கான (2022-2023) மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. இந்நிலையங்களில் பிட்டர், எலக்டீரிசியன், வயர்மேன், மெக்கானிக் டீசல், வெல்டர், மெக்கானிக் மோட்டார் வெகிக்கிள், பம்ப் ஆப்ரேட்டர் கம் மெக்கானிக் ஆகிய தொழிற்பிரிவுகளுக்கு மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர் இதில் வயர்மேன், வெல்டர் ஆகிய தொழிற்பிரிவுகளுக்கு குறைந்தபட்சம் 8ம் வகுப்பும், மற்ற தொழிற்பிரிவுகளுக்கு குறைந்தபட்சம் 10ம் வகுப்பும் படித்திருக்க வேண்டும் வயது வரம்பு 14 முதல் 40 வயது வரை இந்த மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை மாதம் ரூ.750, லேப்டாப், சைக்கிள், ஆண்டுக்கு 2 செட் சீருடைகள், ஒரு ஜோடி காலணி, பாடப்புத்தகங்கள் , வரைபட கருவிகள், இலவச பஸ்பாஸ், சலுகை கட்டண ரெயில் பாஸ் அரசு இலவச உணவுடன் கூடிய தங்கும் விடுதி ஆகியன வழங்கப்படும். சேர விரும்புவர்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்க வேண்டும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் முறையே 8ம், 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்று பயிற்சி பெறும் மாணவர்கள் பயிற்சி முடிவின் போது மொழி பாடங்களில் தேர்ச்சி பெற்றால் முறையே 10, 12ம் ம் வகுப்பிற்கு இணையாக கல்விச்சான்று பெற தகுதியுள்ளவர்கள்.விண்ணப்பிக்க கடைசிநாள் ஜீலை 20ந் தேதி ஆகும் தென்காசி, கடையநல்லூர், வீரகேரளம்புதூர் அரசு ஐடிஐ அலுவலகம் ஆகிய இடங்களில் மாணவர் சேர்க்கை உதவி மையங்கள் உள்ளன உதவிக்கு மாணவர்கள் நேரடியாக உதவி மையங்களை அணுகலாம் என்று தென்காசி அரசு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் தெரிவித்துள்ளார்.

## என்.எம்.எம்.எஸ்.தேர்வு: துத்திகுளம் பள்ளி மாணவர்கள் சாதனை

**தென்காசி.ஜூன்.29-**

மத்திய அரசு எட்டாம் வகுப்பு கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் தேசிய வருவாய்வழி மற்றும் திறனறி தேர்வு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் நடத்தி வருகிறது .

இந்த ஆண்டு கொரோனா பாதிப்பு விடுமுறையால் பள்ளி திறப்பு காலதாமதத்தை கருத்தில் கொண்டு கடந்த மார்ச் 5ஆம் தேதி மாநிலம் முழுவதும் நடைபெற்றது இத்தேர்வில் தமிழகத்திலுள்ள 38 மாவட்டங்களிலும் இருந்து லட்சக்கணக்கான மாணவ-மாணவிகள் விண்ணப்பித்து கலந்து கொண்டு தேர்வு எழுதினர் .இத் தேர்வுக்கான முடிவுகள் நேற்று பள்ளிக்கல்வித் துறை நாட்டு நல பணி திட்ட இயக்குனரின் அறிவிப்பின் கீழ் வெளியிடப்பட்டது.

இத்தேர்வில் தமிழகம் முழுவதும் 38 மாவட்டங்களில் 5900 பேர் தேர்ச்சி பெற்று வெற்றி பெற்றுள்ளனர். இத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை மாதம் 1,000 ரூபாய் உதவித் தொகையாக அதாவது வருடத்திற்கு 12 ஆயிரம் மொத்தத்தில் நான்கு வருடத்திற்கு 48 ஆயிரம் அவருடைய வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும் இத்தேர்வில் நெல்லை மாவட்டத்தில் 393 பேரும் தென்காசி மாவட்டத்தில் 358 பேரும் தேர்ச்சி பெற்றுள்ளனர். இத்தேர்வில் ஆலங்குளம் வட்டாரம் துத்திகுளம் இந்து நடுநிலைப்பள்ளி மாணவர் லட்சுமண மகாராஜா, மகேஸ்வரி ஆகிய இருவரும் தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளனர். தேர்ச்சி பெற்ற மாணவிகளை ஆலங்குளம் வட்டார கல்வி அலுவலர்கள் லோகநாதன், ஆறுமுகம் பள்ளி நிர்வாகி அருள்ராஜ், பள்ளி தலைமை ஆசிரியர் ஆரோக்கியராஜ், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் பாராட்டினர். ஏற்கனவே கடந்த 2021 என் எம் எஸ் தேர்வில் இப்பள்ளி மாணவர்கள் ஐந்து பேர் தேர்ச்சி பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## சங்கரன்கோவில் புனித ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகள் சாதனை

**சங்கரன்கோவில், ஜுன்.28-**



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் புனித ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவ,மாணவிகள் 10,12ம் வகுப்பு பொதுதேர்வில் அதிக அளவில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளனர். இதில் தேர்வு எழுதிய அனைவரும் தேர்ச்சி பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்தனர்.

12ம் வகுப்பு மாணவி ஜெயசுகின் 557 மதிப்பெண்கள் பெற்று முதல்இடத்தையும், பத்மாவதி 525 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடத்தையும், ஆர்த்தி 513 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடத்தையும், தியோனி ஜெயசீலி 508 மதிப்பெண்கள் பெற்று நான்காம் இடத்தை பெற்று சாதனை படைத்தனர். இதில் உயிரியல் பாடத்தில் ஜெயசுகின் 100 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்தார். 10ம் வகுப்பு மாணவி சிவநந்தினி 494 மதிப்பெண்கள் பெற்று முதல் இடத்தையும், அபர்ணா 490 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடத்தையும், ரெபேக்கா 480 மதிபபெண்கள் பெற்று 3ம் இடத்தையும், சுபா 472 மதிப்பெண்கள் பெற்று 4ம் இடத்தையும் பெற்றனர்.இதில் பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்ற சிவநந்தினி சங்கரன்கோவில் வட்டாரத்தில் முதல் இடத்தை பெற்றுள்ளார். சாதனை படைத்த மாணவிகளை அருட்சகோதரி ஜீவிதா, பள்ளி தாளாளர் அருட்சகோதரி பிலோமின் மேரி, மற்றும் பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் வாழத்தினர். தொடர்ந்து சாதனை படைத்த மாணவிகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களைஅருட்சகோதரி ஜீவிதா பரிசுகள் மற்றும் பொன்னாடை அணிவித்து கவுரவித்தார்.

## தேசிய திறனாய்வு: தேர்வு நடுநிலை பள்ளி மாணவர்கள் சாதனை

**திருச்செந்தூர்,ஜூன்.29-**

குலசேகரன்பட்டினம் பண்டார சிவன் செந்தில் ஆறுமுகம் நினைவு நடுநிலைப் பள்ளியில் தொடர்ந்து 13 ஆண்டுகளாக தேசிய திறனாய்வு தேர்வில் வெற்றி பெற்றுமாணவர்கள் சாதனை படைத்துள்ளனர். மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு துறையின் சார்பில் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டுதோறும் திறனாய்வு தேர்வு நடத்தப்படுகிறது.கடந்த ஆண்டு நடைபெற்ற திறனாய்வுத் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.இதில் குலசேகரன்பட்டினம் பண்டார சிவன் செந்தில் ஆறுமுகம் நினைவு நடுநிலைப்பள்ளி மாணவர்கள் அரிமகாலிங்க ராஜா ,வீரபாகு, முத்துராஜன், இசக்கி ராமன், மாளவிகா ,பிரியதர்ஷினி ,பொன்வைசினி ஆகிய 7 மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். வெற்றி பெற்ற மாணவர்கள் அனைவருக்கும் மாதம்தோறும் ரூபாய் 1000 கல்வி உதவித்தொகை தூத்துக்குடி முதன்மை கல்வி அலுவலகம் மூலம் வழங்கப்படும் .இதில் அரிமகாலிங்க ராஜா 180க்கு 120 மதிப்பெண்கள் பெற்று திருச்செந்தூர் கல்வி மாவட்டத்தில் முதல் மாணவராக வந்துள்ளார் .

வெற்றி பெற்ற மாணவர்களை பள்ளி நிர்வாகி ராதா ஆனந்தகுமார், உடன்குடி வட்டார கல்வி அலுவலர் ஜெயவதிரத்னாவதி, தலைமையாசிரியர் சுபாஷ் சந்திரபோஸ் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டியுள்ளனர்.

## மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்: தென்காசி மாவட்ட வருவாய் அலுவலர் ஜெய்னுலாப்தீன் தலைமையில் நடைபெற்றது

**தென்காசி,ஜூன்.29-**

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைத் தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெய்னுலாப்தீன் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார். பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது தென்காசி மாவட்டத்தில் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டாமாறுதல், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என 480 மனுக்கள் பெறப்பட்டது .இந்தக் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்மந்தப்பட்ட அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்துள்ளார்இக்கூட்டத்தில் அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்

வாகனங்கள் ஓட்டும்
போது செல்போன்
பேசாதே...
பேசுவது எமனாக
இருக்கலாம்

## 10, 11, 12 ம் வகுப்பு பொதுத்தேர்வு: தென்காசி எம்.கே.வி.கே மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி சாதனை

**தென்காசி,ஜூன்.29-**



தென்காசி எம்.கே.வி.கே. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 2021-2022 ஆம் ஆண்டு பொதுத் தேர்வில் சினேகா 493 மதிப்பெண்களுடன் பள்ளியில் முதலிடத்தையும், தஷ்விகா பாத்திமா 488 மதிப்பெண்களுடன் பள்ளியில் இரண்டாமிடமும், செய்யது அப்துல் காதர் 485 மதிப்பெண்களுடன் மூன்றாமிடமும் பெற்றுள்ளனர். தேர்வு எழுதிய 115 மாணவர்களில் 43 பேர் 400 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். தேர்வு எழுதிய மாணவர்களில் கணிதப் பாடத்தில் 1 மாணவியும், அறிவியலில் 2 மாணவர்களும், சமூக அறிவியல் பாடத்தில் 1 மாணவரும் 100-க்கு 100 மதிப்பெண்கள் சாதனை படைத்துள்ளனர். பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வினை 160 மாணவர்கள் எழுதினர். அதில் செல்வகணேஷ் 585 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் முதலிடத்தையும், பரமகல்யாணி 573 மதிப்பெண்களுடன் பள்ளியில் இரண்டாமிடமும், அக்ஷிதா 571 மதிப்பெண்களுடன் பள்ளியில் மூன்றாமிடமும் பெற்றுள்ளனர். தேர்வு எழுதிய 160 மாணவ, மாணவிகளில் 28 பேர் 500 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றுள்ளனர். கணினி அறிவியல் பாடத்தில் 3 பேரும், கணினி பயன்பாடுகள் பாடத்தில் 1 மாணவரும், கணக்குப்பதிவியல் பாடத்தில் 2 மாணவர்களும், வணிகவியல் பாடத்தில் 3 மாணவர்களும், பொருளியல் பாடத்தில் 1 மாணவரும், வணிகக் கணிதப்பாடத்தில் 1 மாணவரும் 100-க்கு 100 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

பதினொன்றாம் வகுப்பு பொதுத் தேர்வினை 100 மாணவர்கள் எழுதினர் அதில் அஸ்வந் மகாதேவ் 572 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் முதலிடத்தையும், அஞ்சுஷா நித்திய ஸ்ரீ 539 மதிப்பெண்களுடன் இரண்டாமிடத்தையும், சுபாஷினி 529 மதிப்பெண்களுடன் மூன்றாடத்தினையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். தேர்வெழுதிய மாணவர்களில் 8 பேர் 500 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றுள்ளனர். கணக்கு பதிவியியலில் 1 மாணவரும், கணினி பயன்பாடுகள் பாடத்தில் 1 மாணவியும் 100-க்கு 100 மதிப்பெண்கள் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர்பள்ளிக்கு பெருமை சேர்த்த மாணவ, மாணவிகளை பள்ளியின் தாளாளர் பாலமுருகன், பள்ளியின் தலைமை ஆசிரியர் ஏசுபாலன் மற்றும் அனைத்து ஆசிரிய, ஆசிரியைகளும் பாராட்டினர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

thinaboomi.com
தினபூமி, ஜூன் 29, 2022

### மாத அமாவாசை நாளை ஒட்டி

# ராமேஸ்வரம் அக்னி தீர்த்த கடலில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நீராடல்



**ராமேஸ்வரம்,ஜூன் 29-**

ராமேஸ்வரம் ராமநாதசுவாமி திருக்கோயிலில் மாத அமாவாசை நாளை வெட்டி அக்னி இந்தக் கடலில் ஆயிரக்கணக்கான புனித நீராடி பின்னர் திருக்கோவிலில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் ராமநாதசாமி திருக்கோவலில் நேற்று ஆனி மாத அமாவாசை நாளையடுத்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்தனர். இவர்கள் காசிக்கு நிகராக கருதப்படும் அக்னிதீர்த்தக்கடலில் புனித நீராடினர். பின்னர் முன்னோர்களுக்கு தோசங்கள் உள்பட பல்வேறு பூஜைகள் கொடுத்தனர். அதனை தொடர்ந்து ராமநாதசாமி கோவிலில் அமைந்துள்ள 22 புனித தீர்த்தத்தில் புனித நீராடினர்.

பின்னர் ராமநாதசுவாமி சன்னதி, பர்வதவர்த்தினி அம்மன் சன்னதியில் நீண்ட நேரம் காத்திருந்து அங்கு நடைபெற்ற தீபாராதனை சிறப்பு அபிஷேக வழிபாட்டில் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். பக்தர்களின் வருகையை கணக்கிட்ட போலீசார் நூற்றுக்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு பக்தர்களை சாமி தரிசனத்திற்கு தீர்த்தத்துக்கு செல்வதற்கு ஒழுங்கு படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்



**மதுரை மாநகராட்சி மண்டலம் 4 அலுவலகத்தில் நடைபெற்ற குறைதீர்க்கும் முகாமில் மேயர் இந்திராணி பொன்வசந்த் பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்றுக் கொண்டார். அருகில் ஆணையாளர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், துணை மேயர் நாகராஜன், மண்டல தலைவர் முகேஷ் சர்மா ஆகியோர் உள்ளனர்.**

# காரைக்குடி அருகே கோவிலுக்கு சொந்தமான 76 ஏக்கர் நிலம் மீட்பு

**காரைக்குடி, ஜூன் 29-**

காரைக்குடி அருகே கோயிலுக்கு சொந்தமான 76 ஏக்கர் நிலங்களை இந்து சமய அறநிலைத்துறை அதிகாரிகள் மீட்டனர்.

காரைக்குடி அருகே உள்ள பூவாண்டிபட்டி தேசிகநாதர் ஆலயத்திற்கு சொந்தமான 76 ஏக்கர் இடம் ஆக்கிரமிப்பில் கடந்த பல ஆண்டுகளாக இருந்து வந்தது.

கோர்ட்டு உத்தரவுப்படி தமிழகத்தில் உள்ள பல்வேறு கோவில்களின் சொத்துக்களும் மீட்க்கப்பட்டு வந்த நிலையில் இந்த கோயிலுக்கு சொந்தமான 76 ஏக்கர் நிலங்களை இந்து சமய அறநிலைத்துறை அதிகாரிகள் மீட்டு கோயிலுக்கு சொந்தமான இடம் என சர்வே எண்களுடன் போர்டு வைத்தனர்.

ஆக்கிரமிப்பு செய்திருந்தவர்கள் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில் அவர்களிடம் கோவில் நிலங்கள் மீட்பு தனி தாசில்தார் நீலாவதி சிவகங்கை இந்துசமய உதவி ஆணையர் செல்வராஜ், காரைக்குடி வட்டாட்சியர் மாணிக்கவாசகம், டிஎஸ்பி வினேஜி ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தி போர்டு வைத்தனர். இதனால் கோவிலுக்கு சொந்தமான 76 ஏக்கர்நிலம் மீட்கப்பட்டது.



# திருமங்கலம் நகரில் தோழி வீட்டில் நகை திருடிய ஆசிரியை கைது

**திருமங்கலம், ஜூன் 29-**

திருமங்கலம் நகரில் தோழி வீட்டில் நகை திருடிய ஆசிரியை போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

மதுரை மாவட்டம் திருமங்கலம் சங்கர் நகரைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் மனைவி செந்தில் நாயகி (51). இவரும் மதுரை தலை விரிச்சான் சந்து பகுதியைச் சேர்ந்த அகமத்ராஜா மனைவி உமா மகேஸ்வரி என்ற ரெய்னாபேகம்(32) ஆகிய இருவரும் மதுரை தனியார் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்துள்ளனர்.

மேலும் கடந்த 8 வருடங்களாக இருவரும் நட்பாக இருந்துள்ளனர். இந்நிலையில் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு ரெய்னா பேகம் லேப்டாப் கொடுப்பதற்காக திருமங்கலம் வந்துள்ளார். அப்போது செந்தில் நாயகி தான் வாங்கிய ஒன்பதரை பவுன் நகையை காண்பித்து விட்டு நகையை படுக்கையறையில் வைத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து ரெய்னாபேகம் மதியம் வீட்டிற்கு கிளம்பும் போது துணி மாற்றுவதற்காக படுக்கையறை சென்று துணியை மாற்றி விட்டு சென்றுவிட்டார் .மறுநாள் காலையில் படுக்கை அறையில் வைத்து இருந்த நகையை காணாமல் செந்தில்நாயகி ரெய்னா பேகத்திடம் கேட்டுள்ளார். அதற்கு அவர் எனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக திருமங்கலம் டவுன் காவல் நிலையத்தில் செந்தில் நாயகி கொடுத்த புகாரின் பேரில் போலீசார் விசாரணை மேற்கொண்டதில் விசாரணையில், நகையை எடுத்ததை ரெய்னா பேகம் ஒத்துக்கொண்டார்.

இச்சம்பவம் தொடர்பாக ரெய்னா பேகத்தை போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

### ஒட்டன்சத்திரத்தில்

# பெண் குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்



**ஒட்டன்சத்திரம், ஜூன் 29-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் சட்ட விழிப்புணர்வு இயக்கம் சார்பில் பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

முகாமில் பெண்குழந்தைகள் பாலியல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பாதிக்கப்படுவது குறித்தும், பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் குறித்தும், பெண் கல்வி குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பதாகைகள் மற்றும் கையேடுகள் வெளியிடப்பட்டது.

முகாமில் சட்ட விழிப்புணர்வு இயக்கத்தின் நிர்வாகிகள் தினேஷ் வினோத் ராஜா தங்கதுரை உள்ளிட்ட நிர்வாகிகள் ,பெண்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சிவகங்கையில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் மதுசூதன் ரெட்டி தலைமையில் நடந்தது

### கண்மாய்களை பராமரித்திட அறிவுறுத்தல்



**சிவகங்கை, ஜூன் 29-**

சிவகங்கை மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் விவசாயிகளுக்கான குறை தீர்க்கும் கூட்டம் கலெக்டர் மதுசூதன் ரெட்டி, தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கண்மாய் மற்றும் ஊரணிகளில் உள்ள சீமைக்ருவேல் மரங்களை அகற்றி கண்மாய்களை முழுக்கொள்ளளவுடன் பராமரிப்பது குறித்தும், விளை பொருட்களை கொண்டு செல்வதற்கான சாலை வசதிகளை மேம்படுத்துவது குறித்தும், நீர்நிலை வரத்துக் வாய்க்கால்களை பராமரிப்பது குறித்தும், தேங்காய், நெல் கொள்முதல் நிலையங்கள் அமைப்பது குறித்தும், கிராமங்களுக்கு பேருந்து வசதிகள் குறித்தும், வேளாண் பயிர்களுக்கு நிலுவையிலுள்ள இழப்பீட்டுத் தொகை வழங்கிட வேண்டியும் போன்ற பல்வேறு மனுக்களைப் பெற்று, மனுக்களுக்கு உரிய தீர்வு காண துறை அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மணிவண்ணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சிவராமன், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் வெங்கடேஸ்வரன், கூட்டுறவுத் துறை இணைப்பதிவாளர்கள் ஜீனு, ரவிச்சந்திரன், கால்நடைப் பராமரிப்புத்துறை இணை இயக்குநர் நாகநாதன், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் சுகிதா, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சர்மிளா மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நத்தத்தில் விவசாயிகள் சங்க மாநாடு

**நத்தம், ஜூன் 29-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தாலுகா மாநாடு நடந்தது. இதற்கு முன்னாள் தலைவர் பழனியப்பன் தலைமை வகித்தார். தொடர்ந்து சங்கத்திற்கு புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கபட்டனர். இதில் தலைவராக முத்துக்குமார், செயலாளராக பிச்சன், பொருளாளராக முருகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். பின்னர் மாநாட்டில் நத்தம் பகுதிக்கு உழவர் சந்தை அமைக்க கோருவது,மாம்பழ குளிர்பதன கிடங்கு அமைக்க அரசை வலியுறுத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

# கொடைக்கானல் பெரியூர் கிராமத்தில் பெண்களுக்கு இலவச ஆடுகள்: ஒன்றிய பெருந்தலைவர் வழங்கினார்

**கொடைக்கானல், ஜூன் 29-**

கொடைக்கானல் கீழ் மலை பெரியூர் கிராமத்தில் பெண்களுக்கு இலவச ஆடுகள் வழங்கப்பட்டது.

தமிழக அரசின் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் கூட்டுறவு துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்க்குமார் ஆகியோரின் வழிகாட்டுதல்படி கொடைக்கானல் கீழ்மலை பெரியூர் மலை கிராமத்தில் நாற்பத்தி ஏழு விதவைப் பெண்களுக்கு இலவச வெள்ளாடுகள் வழங்கப்பட்டது. இந்த இலவச வெள்ளாடுகள் வழங்கும் நிகழ்ச்சிக்கு கொடைக்காணல் ஒன்றிய பெருந்தலைவர் சுவேதா ராணி கணேசன் தலைமை தாங்கி வெள்ளாடுகளை வழங்கினார்.



திண்டுக்கல் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கணேசன், கொடைக்கானல் ஒன்றிய கீழ்மலை செயலாளர் கருமலை பாண்டியன்,ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த வெள்ளாடுகள் வழங்கும் நிகழ்ச்சியில் கும்பரையூர் ஊராட்சி மன்ற தலைவர் நாகஜோதி கருணாநிதி,தாண்டிக்குடி ஊராட்சி மன்ற தலைவர் மகேஷ் , கால்நடை உதவி இயக்குநர் பிரபு, கொடைக்கானல் கால்நடை மருத்துவர் அப்துல் ரகுமான், பண்ணைக் காடு பூலத்தூர் கால்நடை மருத்துவர்கள் ரமேஷ், முனிஸ்வரன் கால் நடை ஆய்வாளர், உதவியாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டணர். நாற்பத்தி ஏழு பெண்களுக்கு சுமார் 8 லட்சம் ரூபாய் மதிப்பிலான வெள்ளாடுகள் வழங்கப்பட்டன.

# காஞ்சி, மதுரை, வேலூரில் கால்பதிக்கும் ஸ்டார் ஹவுசிங் பைனான்ஸ் நிறுவனம்

**சென்னை, ஜூன் 29-**

கிராமப்புறங்களை மையமாகக் கொண்டு வீட்டு நிதி நிறுவனமான ஸ்டார் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், கிராமப்புற மக்களின் வீட்டு நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அதன் விரிவாக்க உத்தியின் ஒரு பகுதியாக, ஏற்கெனவே இருக்கும் செயல்படும் பகுதிகளில் மேலும் ஆழமாக ஊடுருவ திட்டமிட்டுள்ளது. சென்னையில் ஏற்கெனவே கால்பதித்துள்ள நிலையில், ஸ்டார் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் காஞ்சிபுரம், வேலூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நேரடி மற்றும் டிஜிட்டல் அலுவலகங்கள் மூலம் விரிவுபடுத்த உத்தேசித்துள்ளது.

இந்த இடங்கள், செயல்பாட்டிற்குப் பின், வீட்டுவசதி நிதியில் அனுபவம் கொண்ட மற்றும் உள்ளூர் குறித்து நன்கு அறிந்த அலுவலர்களைக் கொண்டு நிர்வகிக்கப்படவுள்ளது. இதன் மூலம் வருங்கால கடன் வாங்குபவருக்கு குறைந்த விலை வீடுகள் வடிவில் சொந்த வீட்டை வாங்குதல், கட்டுமானம் செய்தல் ஆகியவற்றுக்கான கடன் அணுகலை செயல்படுத்தும்.

தமிழ்நாட்டிற்கான ஸ்டார் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் வணிக இயக்குனர் ராஜேஷ் கோபிநாத் , தமிழ்நாடு சமீபத்திய ஆண்டுகளில் ரியல் எஸ்டேட் உட்பட அனைத்துத் துறைகளிலும் இந்த மாநிலம் வளர்ச்சி அடைந்து வருகிறது. இதன் விளைவாக, குடியிருப்பு வீடுகளுக்கான தேவை அனைத்து இடங்களிலும் அதிகரித்து வருகிறது. ஸ்டார் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் வீட்டுக் கடன்களுக்கான அதிக தேவையை தொடர்ந்து அடையாளம் கண்டு வருகிறது. மேலும் போட்டியிடத்தக்க திட்டங்கள் மற்றும் சரியான நேரத்தில் வழங்கப்படும் சேவையின் மூலம் இந்தப் பகுதிகளில் அதன் தடத்தை விரிவுபடுத்துவதில் நம்பிக்கையுடன் உள்ளது என்றார்.



**தேனி மாவட்டம் சின்னமனூர் நகராட்சி பகுதியில் ஆதிதிராவிட அரசு மாணவியர் விடுதியின் செயல்பாடுகள் குறித்து கலெக்டர் முரளீதரன் நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்டு மாணவிகளிடம் அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்தார். அருகில் உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் கௌசல்யா உள்ளார்.**

### அருப்புக்கோட்டையில்

# தற்கொலைக்கு முயன்று தீக்குளித்தவர் சிகிச்சை பலனின்றி பரிதாப சாவு

**அருப்புக்கோட்டை, ஜூன் 29-**

அருப்புக்கோட்டையில் தற்கொலைக்கு முயன்று தீக்குளித்தவர் சிகிச்சை பனின்றி உயிரிழந்தார்.

அருப்புக்கோட்டை நெசவாளர் குடியிருப்பைச்சேர்ந்தவர் நாகராஜன் ( 60 ).இவரது மனைவி கல்யாணி (50).திருமணமான தங்களது மகள் வீடு உள்ளூரிலேயே இருந்தும்கூட தம்பதியர் இருவரும் தனியே வசித்து வந்தனராம்.நாகராஜன் குடிப்பழக்கத்திற்கு ஆள்பட்டிருந்ததால்,அடிக்கடி தம்பதியருக்குள் தகராறு வருவதுண்டாம்.இதுபோல திங்கள்கிழமை மாலையும் இருவருக்குள்ளும் வாய்த்கராறு ஏற்பட்டதாம்.

இதில் மனமுடைந்த நிலையில் இருந்த அவர்,சிறிது நேரத்தில் வீட்டுத்திண்ணையிலிருந்தவாறே தனது உடலில் பெட்ரோலை ஊற்றித் தீவைத்துக் கொண்டாராம்.இதனால் அவரது அலறல் சப்தம் கேட்டு வீட்டிற்குள்ளிருந்த அவரது மனைவியும் அக்கம்பக்கத்தாரும் உதவிக்கு ஓடிவந்து முதியவர் நாகராஜனை சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்தனராம்.

மேல்சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாராம்.ஆனால் சிகிச்சை பலனின்றி முதியவர் நாகராஜன் உயிரிழந்தார்.இது தொடர்பாக வழக்கு பதிந்த அருப்புக்கோட்டை நகர் காவல்துறையினர், நாகராஜனின் இறப்பு குறித்து விசாரணை மேற்கொண்டனர்.

# புதிய வகை சமையலறை உபகரணங்களை அறிமுகப்படுத்திய கிராம்ப்டன் நிறுவனம்

**சென்னை, ஜூன் 29-**

கிராம்ப்டன் அதன் புதிய உள்ளமைக்கப்பட்ட சமையலறை உபகரணங்கள் தயாரிப்புகளை சென்னையில் அறிமுகப்படுத்தியது. எங்கள் அறிமுக வரிசையில் சென்னை நான்காவது நகரமாகும். வரும் வாரங்களில், எங்கள் தயாரிப்புகள் இந்தியா முழுவதும் முதன்மையான 10 பெருநகரங்களில் அறிமுகப்படுத்தப்படும்.

சிம்னிகள், கேஸ் ஹாப்ஸ், பில்ட்-இன் ஓவன்கள், பில்ட்-இன் மைக்ரோவேவ்ஸ் மற்றும் டிஷ்வாஷர்களை உள்ளடக்கிய 38 மாடல்களின் விரிவான வரம்பை கிராம்ப்டன் அறிமுகம் செய்கிறது. இந்த தயாரிப்புகள் விரிவான நுகர்வோர் ஆராய்ச்சியின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன, இவை சமையலறைகளில் நுகர்வோரின் வாழ்க்கையை மகிழ்ச்சியாகவும் வசதியாகவும் மாற்றுவதற்கான ஈடேற்றப்படாத தேவைகளை நிவர்த்தி செய்கிறது. கிராம்ப்டனின் புத்தாக்கம், வளர்ச்சி குழுக்கள், மேற்கூறிய நோக்கங்களை ஈடேற்ற, நுகர்வோர் எலக்ட்ரிக்கல்ஸ், ஏர் மேனேஜ்மென்ட் பயனர் அனுபவம் மற்றும் பயனர் இடைமுகப்பு ஆகியவற்றில் தங்களின் நிபுணத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

தானியங்கு ஆன் மற்றும் ஆட்டோ க்ளீன் அம்சத்துடன் கூடிய ஸ்மார்ட் சிம்னி, சமைக்கும் போது தானாக இயங்கும் மற்றும் அவ்வப்போது தன்னைத்தானே சுத்தம் செய்துகொள்ளும். சிறந்த உலர்த்தலுக்காக டர்போ டிரையிங் தொழில்நுட்பத்தை டிஷ்வாஷர்கள் கொண்டுள்ளன.

நீராவி பல்ஸ் தொழில்நுட்பத்துடன் உள்ளமைக்கப்பட்ட ஓவன்கள் இந்திய உணவுகள் மற்றும் உலகளாவிய உணவு வகைகளை சமைக்க உதவும்.

# தேனி எம்.பி தொகுதி நிதியிலிருந்து காமாட்சிபுரம் பள்ளிக்கு ரூ.6 லட்சம் மதிப்பில் பெஞ்ச், டெஸ்க்



**தேனி, ஜூன் 29-**

தேனி மாவட்டம், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குபட்ட காமாட்சிபுரம் பச்சையப்பா இந்து நாடார் மேல்நிலை பள்ளிக்கு தேனி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 6 லட்சம் மதிப்பிலான பெஞ்ச், டெஸ்க் வழங்கப்பட்டது.

காமாட்சிபுரம் பச்சையப்பா இநது நாடார் மேல்நிலை பள்ளியில் அதிக மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். அவர்களின் இருக்கை வசதி செய்து தரக்கோரி சின்னமனூர் ஒன்றிய செயலாளர்கள் விமலேஸ்வரன், பாண்டியராஜ், பள்ளி நிர்வாகிகள் உள்ளிட்டோர் தேனி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ப.ரவீந்திரநாத்திடம் கோரிக்கை வைத்தனர்.

இவர்களின் கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 6 லட்சம் நிதியை ப.ரவீந்திரநாத் எம்.பி ஒதுக்கினார். அதனை தொடர்ந்து நேற்று ஒன்றிய செயலாளர்கள் விமலேஸ்வரன், பாண்டியராஜ் ஆகியோர் முன்னிலையில் பள்ளிக்கு தேவையான டெஸ்க் மற்றும் பெஞ்ச்கள் பள்ளி உறவின்முறை பொறுப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் காமாட்சிபுரம் கிளை கழக செயலாளர்கள் சொக்கர்செல்வம், அய்யங்குட்டி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மாணவ, மாணவிகளுக்கு இருக்கை வசதி செய்து கொடுத்த தேனி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ப.ரவீந்திரநாத்துக்கு பள்ளி உறவின்முறை பொறுப்பாளர்கள், பள்ளி தலைமையாசிரியர், ஆசிரிய, ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் நன்றி தெரிவித்தனர்.



**மதுரை மாவட்டம் வைரவநத்தம் ஊராட்சி மன்றத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி நடைபெற்றது. இதனை ஏராளமானோர் கண்டுகளித்தனர்.**

### நவம்பரில் நியூசிலாந்தில் சுற்றுப்பயணம்:

# இந்திய அணியின் 3 ஒருநாள், 3 டி - 20 போட்டிக்கான அட்டவணை வெளியீடு

**மும்பை, ஜூன் 29-**



இந்திய அணி இந்த வருட நவம்பர் மாதம் நியூசிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்து ஒருநாள், டி20 தொடர்களில் விளையாடவுள்ளது.

**சூப்பர் 12 சுற்று...**

டி-20 உலகக் கோப்பைப் போட்டியில் சூப்பர் 12 சுற்று அக்டோபர் 22 முதல் தொடங்குகிறது. நவம்பர் 13 அன்று இறுதிச்சுற்று நடைபெறுகிறது. இப்போட்டியில் பங்கேற்ற பிறகு இந்திய அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள், 3 டி20 ஆட்டங்களில் விளையாடவுள்ளது.

**நவம்பர் 18 முதல்...**

இந்திய அணியின் நியூசிலாந்துச் சுற்றுப்பயணத்துக்கான அட்டவணை நேற்று வெளியாகியுள்ளது. டி20 தொடர் நவம்பர் 18 முதல் தொடங்குகிறது. ஒருநாள் தொடர் நவம்பர் 25 முதல் தொடங்குகிறது. டி20 ஆட்டங்கள் வெல்லிங்டன், தாரங்கா, நேபியர் ஆகிய நகரங்களிலும் ஒருநாள் தொடர் ஆக்லாந்து, ஹேமில்டன், கிறைஸ்ட்சர்க் ஆகிய நகரங்களிலும் நடைபெறவுள்ளன.

| இந்திய அணியின் சுற்றுப்பயணம் |
|---|
| 1) முதல் டி20: நவம்பர் 18. |
| 2) 2-வது டி20: நவம்பர் 20. |
| 3) 3-வது டி20: நவம்பர் 22 |
| 4) முதல் ஒருநாள்: நவம்பர் 25. |
| 5) 2-வது ஒருநாள்: நவம்பர் 27. |
| 6) 3-வது ஒருநாள்: நவம்பர் 30. |

# கடின சூழலை கடந்துவிட்டால் கோலிக்கு வசந்த காலம்தான்..!

### முன்னாள் வீரர் ஷேவாக் கணிப்பு

**புதுடெல்லி, ஜூன் 29-**



இந்திய அணியின் முன்னாள் கேப்டன் விராட் கோலி கடைசியாக எப்போது சதம் பதிவு செய்தார் என்பது தனக்கு நினைவில் இல்லை என்றும், ஆனால் அந்த கடினமான சூழலை அவர் கடந்துவிட்டதால் இனி அவருக்கு வசந்த காலம்தான் எனவும் முன்னாள் கிரிக்கெட் வீரர் வீரேந்திர சேவாக் கருத்து தெரிவித்துள்ளார்.

**ரசிகர்கள் ஏக்கம்...**

மாடர்ன் டே கிரிக்கெட்டின் மகத்தான வீரர்களில் ஒருவராக அறியப்படுகிறார் விராட் கோலி. இருந்தும் ஏனோ கடந்த 2019 நவம்பருக்குப் பின் அவர் சதம் பதிவு செய்யாமல் உள்ளார். மூன்று ஃபார்மெட் கிரிக்கெட்டிலும் இந்த நிலை தொடர்வது குறிப்பிடத்தக்கது. தனது அடுத்த சதத்தை அவர் எப்போது பதிவு செய்வார் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் நீண்ட நாட்களாகவே நீடித்து வருகிறது. இந்நிலையில், சேவாக் மேற்கண்ட கருத்தை தெரிவித்துள்ளார்.

**கோலி விரும்புவார்...**

கடைசியாக கோலி எப்போது சதம் விளாசினார் என உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? எனக்கு அறவே அது குறித்து ஞாபகம் இல்லை. ஆனால், இங்கிலாந்து மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான தொடரை உறுதி செய்யும் எட்ஜ்பாஸ்டன் டெஸ்ட் போட்டியில் அவர் பெரிய அளவில் ரன் சேர்க்க வேண்டும் என நிச்சயம் விரும்புவார்.

**தொடரை வெல்லும்...**

அவரது கடினமான காலம் எல்லாம் முடிந்துவிட்டது என நான் கருதுகிறேன். அவருக்கான நல்ல காலம் தொடங்கி விட்டதாகவே நான் பார்க்கிறேன். பயிற்சி ஆட்டத்தில் அரை சதம் பதிவு செய்துள்ளார் என சேவாக் குறிப்பிட்டுள்ளார். வரும் 1-ஆம் தேதி இந்திய கிரிக்கெட் அணி, இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறது. இதில் இந்தியா வெற்றி பெற்றாலோ அல்லது போட்டியை சமன் செய்தாலோ 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை வெல்லும். கடந்த ஆண்டு 4 போட்டிகள் நடந்த நிலையில், கடைசி போட்டி கரோனா பரவல் காரணமாக கைவிடப்பட்டது. கோலி 101 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 8043 ரன்கள் சேர்த்துள்ளார். இதில் 27 சதங்கள் அடங்கும்.

### விம்பிள்டன் டென்னிஸ் முதல் சுற்றில் வெற்றி:

# 80 வெற்றிகளை குவித்த முதல் வீரர் ஆனார் ஜோகோவிச்..!

**லண்டன், ஜூன் 29-**



விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார். இதன் மூலம், அனைத்து வகை கிராண்ட் ஸ்லாம் போட்டிகளிலும் தலா 80 வெற்றிகளை குவித்த முதல் வீரர் என்ற அரிய சாதனையை அவர் நிகழ்த்தியுள்ளார்.

**போராடி வெற்றி...**

முதல் நிலை வீரரான ஜோகோவிச், விம்பிள்டன் முதல் சுற்றில் தென் கொரியாவின் குவான் சூன் வூ-வை எதிர்கொண்டார். இந்தப் போட்டியில் 6-3, 3-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் நோவக் ஜோகோவிச் போராடி வெற்றி பெற்றார். விம்பிள்டன் தொடரில் ஜோகோவிச்சின் 80ஆவது வெற்றி இதுவாகும். முன்னதாக பிரெஞ்ச் ஓபனில் 85 வெற்றிகளையும், ஆஸ்திரேலிய ஓபனில் 82 வெற்றிகளையும், அமெரிக்க ஓபனில் 81 வெற்றிகளையும் குவித்துள்ளார்.

**புதிய சாதனை...**

இதன் மூலம் அனைத்து கிராண்ட் ஸ்லாம்களிலும் தலா 80 வெற்றிகளை குவித்து ஜோகோவிச் புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளார். இந்த சாதனையை நிகழ்த்திய முதல் வீரர் ஜோகோவிச் தான்.

### முத்தரப்பு டி-20 தொடர் அறிவிப்பு:

# முதல் போட்டியில் வங்கதேசத்தை எதிர்கொள்ளும் பாகிஸ்தான் அணி

**லாகூர், ஜூன் 29-**



நியூசிலாந்து, வங்கதேசம், பாகிஸ்தான் அணிகள் இடையேயான முத்தரப்பு டி-20 தொடரில்

முதல் போட்டியில் வங்கதேசத்தை எதிர்கொள்கிறது பாகிஸ்தான் அணி.

**முத்தரப்பு தொடர்...**

டி20 உலகக்கோப்பை போட்டி அக்டோபர் 16-ந் தேதி தொடங்குகிறது. டி20 முத்தரப்பு தொடர் அக்டோபர் 7-ம் தேதி முதல் தொடங்குகிறது. டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் வருகிற அக்டோபர் மாதம் ஆஸ்திரேலியாவில் தொடங்குகிறது. அந்த போட்டிக்கு முன்பாக பாகிஸ்தான் அணி நியூசிலாந்தில் முத்தரப்பு தொடரில் விளையாடுகிறது. 3-வது அணியாக வங்களாதேசம் விளையாடுகிறது. டி20 தரவரிசையில் மூன்றாவது இடத்தில் இருக்கும் பாகிஸ்தான் அணி அக்டோபர் 7 மற்றும் 10-ம் தேதிகளில் எட்டாவது இடத்தில் இருக்கும் வங்கதேசம் மற்றும் ஆறாவது இடத்தில் உள்ள நியூசிலாந்து அணிகளுடன் விளையாடுகிறது.

**முதல் போட்டியில்...**

இந்த டி20 முத்தரப்பு தொடர் அக்டோபர் 7-ம் தேதி முதல் தொடங்குகிறது. முதல் போட்டியில் பாகிஸ்தான்-வங்கதேசம் மோதுகிறது. அக்டோபர் 11 ஆம் தேதி பாகிஸ்தான் நியூசிலாந்தையும், அக்டோபர் 13 ஆம் தேதி வங்காளதேசத்தையும் எதிர்கொள்கிறது. டி20 உலகக்கோப்பை போட்டி அக்டோபர் 16-ந் தேதி தொடங்குகிறது குறிப்பிடத்தக்கது.

| முத்தரப்பு டி-20 அட்டவணை |
|---|
| 1) 7 அக். – பாகிஸ்தான் வங்காளதேசம். |
| 2) 8 அக். – பாகிஸ்தான் v நியூசிலாந்து. |
| 3) 9 அக். – வங்காளதேசம் v நியூசிலாந்து. |
| 4) 11 அக். – நியூசிலாந்து v பாகிஸ்தான். |
| 5) 12 அக். – வங்காளதேசம் v நியூசிலாந்து. |
| 6) 13 அக். – வங்காளதேசம் v பாகிஸ்தான். |
| 7) 14 அக். – இறுதி ஆட்டம். |

# டி-10 தொடருக்கு தயாராகும் மே.இ.தீவுகள் வீரர் கெயில்



மேற்கிந்திய தீவுகள் அணி வீரர் கிறிஸ் கெயில் சிபில் டி20 போட்டியிலிருந்து விலகி டி10 தொடருக்கு தயாராகுகிறார். 'கரிபீயன் பிரிமியர் லீக்' என்னும் டி20 போட்டிகளில் இருந்து கிறிஸ் கெயில் விலகி '6ஸ்டி' எனப்படும் டி10 தொடருக்கு தயாராகி வருகிறார்.

"இந்த வருடம் குறைந்த ஓவர் உடைய போட்டிகளில் விளையாட இருக்கிறேன். நான் உண்மையிலேயே இந்த 6ஸ்டியின் புதுமையான முயற்சியில் விளையாட ஆவலாக உள்ளேன். குறிப்பாக முதல் 12 பந்துகளில் 2 சிக்ஸர்கள் அடித்து 3வது ஓவரை பவர்பிளேவாக மாற்றும் விதி இருப்பதால் அதை உபயோகிக்க வேண்டுமென நினைக்கிறேன்" என கிறிஸ் கெயில் தெரிவித்தார்.

# இந்திய ஹாக்கி ஜாம்பவான் வரீந்தர் சிங் காலமானார்

இந்திய ஹாக்கி ஜாம்பவான்களில் ஒருவர் என அறியப்படும் வரீந்தர் சிங் (Varinder Singh) காலமானார். அவருக்கு வயது 75. ஹாக்கி உலகக் கோப்பை மற்றும் ஒலிம்பிக் பதக்கம் வென்ற இந்திய அணியில் விளையாடிய வீரர்களில் அவரும் ஒருவர். 'ஹாக்கி இந்தியா' அமைப்பு அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளது. பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து இந்திய நாடு விடுதலை பெற சில நாட்கள் மட்டுமே எஞ்சியிருந்த நிலையில், பஞ்சாப் மாநிலத்தின் ஜலந்தரில் 1947, மே 16-ஆம் தேதி அன்று பிறந்தவர் வரீந்தர் சிங்.

1970-களில் இந்திய ஹாக்கி அணியின் பல்வேறு வரலாற்று சிறப்புமிக்க வெற்றியில் பங்கு கொண்டவர். 1972 ஒலிம்பிக்கில் வெண்கலம், 1973 உலகக் கோப்பையில் வெள்ளி, 1975 உலகக் கோப்பையில் தங்கம், 1974 மற்றும் 1978 ஆசிய விளையாட்டுகளில் வெள்ளியும் வென்ற அணியில் அவர் விளையாடி உள்ளார். இந்திய அணி இதுவரை ஹாக்கி உலகக் கோப்பையில் ஒரே ஒரு முறை மட்டுமே சாம்பியன் பட்டம் வென்றுள்ளது. அந்த அணியில் விளையாடியவர் தான் வரீந்தர் சிங்.

# வங்கதேசத்திற்கு எதிரான டெஸ்ட்: தொடரை வென்றது மே.இ.தீவுகள்

வங்காளதேச அணி வெஸ்ட் இண்டீசுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதில் முதல் டெஸ்ட் போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் அணி வெற்றி பெற்றிருந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியானது செயிண்ட் லூசியாவில் நடைபெற்று வந்தது. இதில் டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் அணி பந்துவீச்சை தேர்வுசெய்தது. அதன்படி களமிறங்கிய வங்காளதேச அணி 64.2 ஓவர்களில் 234 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதையடுத்து களமிறங்கிய வெஸ்ட் இண்டீஸ் அணி, மேயர்ஸ்சின் சதத்தின் உதவியுடன் 408 ரன்களை குவித்தது. பின்னர் 174 ரன்கள் பின் தங்கிய நிலையில் தனது இரண்டாம் இன்னிங்சை தொடங்கிய வங்காளதேச அணி 186 ரன்களுக்குள் சுருண்டது. இதனால், வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு 12 ரன்களே வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய வெஸ்ட் இண்டீஸ் அணி, விக்கெட் இழப்பின்றி இலக்கை கடந்து 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

# இந்திய டெஸ்ட் அணியில் சாஹல்: இங்கி., முன்னாள் வீரர் விருப்பம்

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளரான யுஸ்வேந்திர சாஹல் ஒருநாள் மட்டும் டி20 போட்டிகளில் விளையாடி வருகிறார். இவர் 61 ஒருநாள் மற்றும் 60 டி20 போட்டிகளில் விளையாடி உள்ளார். ஒருநாள் போட்டிகளில் 104 விக்கெட்டும் டி20 போட்டிகளில் 75 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். ஐபிஎல் போட்டியில் ராஜஸ்தான் அணிக்காக விளையாடிய சாஹல் சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்தினார். தற்போது விளையாடி வரும் அயர்லாந்துக்கு எதிரான முதல் டி20 போட்டியில் அவர் ஆட்ட நாயகன் விருதை தட்டி சென்றார்.

இந்நிலையில் சாஹல் இந்திய டெஸ்ட் அணியில் இடம் பெறுவார் என இங்கிலாந்து அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இது குறித்து ஸ்வான் கூறியதாவது:- ஸ்வான் சாஹாலுக்கு இந்திய டெஸ்ட் அணியில் விளையாட விருப்பம் என்றால் உடனடியாக சேர்த்துக் கொள்வேன். இதை நான் சாஹலுடன் அமர்ந்து கேட்க வேண்டும். ஏனென்றால் அவர் உலகத் தரம் வாய்ந்த வீரர். அவர் உலகின் சிறந்த ஸ்பின்னர் என்று நான் நம்புகிறேன். கடினமான சூழ்நிலைகளில் லெக்-ஸ்பின் வீசும்போது குறிப்பாக பனி மற்றும் ஈரமாக இருக்கும் போது அவர் சிறப்பாக செயல்படுவார். இவ்வாறு அவர் கூறினார்.

# விம்பிள்டன் டென்னிஸ்: 2-வது சுற்றில் அல்கராஸ்

கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர்களில், மிக உயரியதாக கருதப்படும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் லண்டனில் நேற்று முன்தினம் தொடங்கின. ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதலாவது சுற்று ஆட்டம் ஒன்றில் நடப்பு சாம்பியன் நோவக் ஜோகோவிச் (செர்பியா) 6-3, 3-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில், தென்கொரியாவின் சூன்வோகி வோனை தோற்கடித்து 2-வது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் ஸ்பெயின் இளம் வீரர் கார்லோஸ் அல்கராஸ், ஜெர்மனியின் ஜான் லெனார்ட் ஸ்ட்ரஃப்பை 4-6, 7-5, 4-6, 7-6, 6-4 என்ற செட் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றார். இதேபோல் கேஸ்பர் ரூட் (நார்வே), கேமரூன் நோரி (இங்கிலாந்து) உள்ளிட்டோரும் முதல் சுற்றில் வெற்றி பெற்றனர். பெண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில் துனிசியா வீராங்கனை ஆன்ஸ் ஜாபியர், சுவீடனின் மிர்ஜாம் பிஜோர்க்லுன்டை 6-1, 6-3 என்ற நேர்செட்டில் வீழ்த்தினார்.

# இங்கிலாந்தில் ஜூலை 30-ம் தேதி பென்னிகுயிக் சிலை திறப்பு விழா

**லண்டன், ஜூன் 29-**

ஜூலை 30-ல் நடைபெறவுள்ள பென்னிகுயிக் சிலை திறப்பு விழாவில் இங்கிலாந்து அரச குடும்பத்தினர் பங்கேற்கவுள்ளனர்.

ஜூலை 30ம் தேதி இங்கிலாந்தில் பென்னிகுயிக் சிலை திறப்பதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. பென்னிகுயிக் பிறந்த ஊரான இங்கிலாந்து நாட்டின் கேம்பர்ள் நகர மையப் பூங்காவில் இந்த சிலை அமைக்கப்படுகிறது. முல்லைப்பெரியாறு அணையை கட்டிய பென்னிகுயிக்கிற்கு தமிழக அரசு சார்பில் அவரது சொந்த ஊரில் சிலை தயாராகி வருவது குறிப்பிடத்தக்கது.

# மதுரை – திண்டுக்கல் பயணிகள் ரயில் ஜூலை 10 முதல் மீண்டும் இயக்கம்

**மதுரை, ஜூன் 29-**

மதுரை - திண்டுக்கல் இடையே பயணிகள் ரயில் வரும் 10-ம் தேதி முதல் இரு மார்க்கங்களிலும் மீண்டும் தொடங்க ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

மதுரை - திண்டுக்கல் இடையே முன்பதிவு இல்லாத பயணிகள் ரயில் இயக்கப்பட்டு வந்தது. இது கொரோனா பரவலின் போது நிறுத்தப்பட்டது. தமிழகத்தில் கொரோனா பரவல் குறைந்த பிறகும் அந்த ரயில்கள் மீண்டும் இயக்கப்படவில்லை. இந்த நிலையில் மதுரை - திண்டுக்கல் இடையே முன்பதிவு இல்லாத பயணிகள் ரயில் போக்குவரத்தை, வருகிற 10-ம் தேதி முதல் இரு மார்க்கங்களிலும் மீண்டும் தொடங்குவது என்று ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

திண்டுக்கல்லில் இருந்து 10-ம் தேதி முதல் தினமும் காலை 8 மணிக்கு புறப்படும் பயணிகள் ரயில், காலை 9.20 மணிக்கு மதுரை வரும். மறுமார்க்கத்தில் மதுரையில் இருந்து மாலை 6.10 மணிக்கு புறப்படும் பயணிகள் ரயில், இரவு 7.45 மணிக்கு திண்டுக்கல் செல்லும். இந்த ரயில்கள் அம்பாத்துரை, கொடைரோடு, வாடிப்பட்டி, சோழவந்தான், சமயநல்லூர், கூடல் நகரில் நின்று செல்லும். இந்த தகவலை மதுரை கோட்ட ரயில்வே அலுவலகம் தெரிவித்து உள்ளது.

# மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாயி வாழ்க்கை வரலாறு திரைப்படமாகிறது

**புதுடெல்லி, ஜூன் 29-**

மூன்று முறை இந்திய நாட்டின் பிரதமராக இருந்த அடல் பிஹாரி வாஜ்பாயியின் வாழ்க்கையை மையமாகக் கொண்ட பயோபிக் திரைப்படம் உருவாக்கப்பட உள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த அறிவிப்பை படத்தை இணைந்து தயாரிக்க உள்ள வினோத் பானுஷாலி மற்றும் சந்தீப் சிங் வெளியிட்டுள்ளனர். இந்தப் படம் சுருக்கமாக 'அடல்' என அறியப்படுகிறது. வரும் 2023 கிறிஸ்துமஸ் நாளன்று இந்தப் படம் வெளியாகும் எனத் தெரிகிறது. அன்றைய தினம் வாஜ்பாயின் 99-வது பிறந்த நாள். அதனை முன்னிட்டு இந்தப் படம் வெளியாகும் எனத் தெரிகிறது.

*The Untold Vajpayee: Politician and Paradox* என்ற புத்தகத்தை தழுவி இந்தப் படத்தின் திரைக்கதை அமைய உள்ளது. இதில் அவரது பால்ய காலம், கல்லூரி நாட்கள் மற்றும் அரசியல் என்ட்ரி குறித்து விவரிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

# சோனியா காந்தி உதவியாளர் மீது பாலியல் வன்புணர்வு வழக்கு பதிவு

**புதுடெல்லி, ஜூன் 29-**

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் உதவியாளர் பிபி மாதவன் (71) மீது பாலியல் வன்புணர்வு வழக்கு பதியப்பட்டுள்ளது.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் உதவியாளராக 71 வயதான பிபி மாதவன் இருந்து வருகிறார். இவர் மீது பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்து மிரட்டல் விடுத்ததாக டெல்லி போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளது. இந்திய தண்டனைச் சட்டம் (ஐபிசி) பிரிவு 376 மற்றும் 506ன் கீழ் டெல்லி உத்தம் நகர் காவல் நிலையத்தில் எப்ஐஆர் பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் 25-ம் தேதி மாதவன் மீது அளிக்கப்பட்ட புகாரை தொடர்ந்து போலீசார் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளனர். மாதவன் மீதான புகார் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருவதாக துவாரகா இணை காவல் ஆணையர் ஹர்ஷ் வர்த்தன் கூறியுள்ளார்.

### ஒரேநாளில் 27 பேர் பலி:

# இந்தியாவில் 11,793 பேருக்கு புதிதாக கொரோனா தொற்று

**புதுடெல்லி, ஜூன் 29-**

இந்தியாவில் கொரோனா தொற்றுக்கு ஒரேநாளில் 27 பேர் பலியானதாகவும், நாட்டில் புதிதாக 11,793 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 4,73,717 பரிசோதனைகள் மேற்கொண்டுள்ளதாகவும் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

நாட்டின் கொரோனா பாதிப்பு நிலவரம் பற்றிய தரவுகளை மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. புதிதாக 11,793 பேருக்கு நோய்த் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் 27 பேர் நோய்த் தொற்றுக்குப் பலியானதையடுத்து, மொத்த பலி எண்ணிக்கை 5,25,047 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 9,486 பேர் நோய்த் தொற்றிலிருந்து குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதுவரை மொத்தம் 4,27,97,092 பேர் குணமடைந்துள்ளனர்.

நேற்றைய நிலவரப்படி இன்னும் 96,700 பேர் நோய்த் தொற்றுக்கான சிகிச்சை பெற்று வருகின்றனர். மொத்த பாதிப்பில் 0.22 சதவிகிதம். தேசிய அளவில் குணமடைவோர் விகிதம் 98.57 ஆக உள்ளது. தினசரி தொற்று உறுதி செய்யப்படும் விகிதம் 2.49 சதவிகிதமாகப் பதிவாகியுள்ளது. வாராந்திர விகிதம் 3.36 சதவிகிதம்.

கடந்த 24 மணி நேரத்தில் 4,73,717 பரிசோதனைகள் செய்யப்பட்ட நிலையில் மொத்தம் இதுவரை 86.14 கோடி பரிசோதனை மேற்கொண்டுள்ளது. அமைச்சகம் வெளியிட்டுள்ள தரவுகளின் படி, நாட்டில் இதுவரை மொத்தம் 197.31 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

### கொரோனா தொற்று அபாயம்:

# இந்திய வீரர்களுக்கு பி.சி.சி.ஐ கட்டுப்பாடு

**பர்மிங்காம், ஜூன் 29-**

கொரோனா தொற்று அபாயம் காரணமாக இந்திய வீரர்களுக்கு பி.சி.சி.ஐ கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. வீதிகளில் சுற்றித்திரிந்த சில இந்திய வீரர்களுக்கு பிசிசிஐ கண்டனமும் தெரிவித்துள்ளது

**கடைசி டெஸ்ட்...**

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கடந்த ஆண்டு தள்ளி வைக்கப்பட்ட இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையிலான 5-வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பர்மிங்காமில் ஜூலை 1-ந் தேதி தொடங்குகிறது. டெஸ்ட் தொடருக்கு முன்னதாக இந்தியா- லீசெஸ்டர்ஷைர் அணிகளுக்கு இடையிலான பயிற்சி ஆட்டம் நடந்தது. இந்த பயிற்சி ஆட்டம் டிராவில் முடிவடைந்தது. போட்டியின் போது இந்திய கேப்டன் ரோகித் சர்மா கொரோனாவால் பாதிக்கப்பட்டார். அதனால் அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

**பொது இடங்களில்...**

இந்த நிலையில் இந்திய அணியில் சில வீரர்களுக்கு பிசிசிஐ கண்டனம் தெரிவித்துள்ளது.கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில் இங்கிலாந்தில் பொது இடங்களில் சுற்றி ரசிகர்களுடன் செல்பி எடுத்துக் கொண்டதாக சில வீரர்களுக்கு பிசிசிஐ கண்டனம் தெரிவித்துள்ளது.மேலும் பிசிசிஐ, அத்தியாவசியமாக இருந்தால் மட்டும் வீரர்கள் வெளியே செல்ல வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது. சமீபத்தில் விராட் கோலி ,ரிஷப் பண்ட் ஆகியோர் ரசிகர்களுடன் எடுத்து கொண்ட புகைப்படங்கள் இணையத்தில் வைரலானது குறிப்பிடத்தக்கது.

# பென் ஸ்டோக்ஸின் புதிய சகாப்தம்




**3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் உலக டெஸ்ட் சாம்பியனான நியூசிலாந்து அணியை இங்கிலாந்து அணி ஒயிட் வாஷ் செய்துள்ளது. இந்த வெற்றி மூலம் புதிய டெஸ்ட் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் தலைமையில் இங்கிலாந்து அணி புதிய சகாப்தத்தை தொடங்கியுள்ளது.**




● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, "ரூல் ஆப் தி காமனர்" என்ற நூலினை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் க.பொன்முடி, தங்கம் தென்னரசு மற்றும் திட்டக்குழு துணைத்தலைவர் ஜெ.ஜெயரஞ்சன், நூலாசிரியர்கள் ராஜன்கிருஷ்ணன், ரவீந்திரன், ஸ்ரீராமச்சந்திரன், வி.எம்.எஸ்.சுபகுணராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

# நவிமும்பை தமிழ்ச்சங்கத்தின் கட்டிட வளாக விரிவாக்க பணிக்கு ரூ.50 லட்சம் நிதியுதவி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்


சென்னை,ஜூன் 29-

சென்னை தலைமைச் செயலகத்தில், நவிமும்பைத் தமிழ்ச் சங்கத்தின் கட்டிட வளாக விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டு பணிகளுக்காகத் தமிழக அரசின் நிதியுதவியாக 50 லட்சம் ரூபாய்க்கான காசோலையை நவிமும்பைத் தமிழ்ச்சங்கத்தின் அறங்காவலர் குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தியிடம் நேற்று முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்.

தி.மு.க. அரசு பொறுப்பேற்றதும், முடிவுறாமல் இருந்த நவிமும்பைத் தமிழ்ச் சங்கத்தின் கட்டிட விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ. 25 லட்சம் முதல்வரால் 10.12.2021 அன்று வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கட்டிடப் பணிகளை முடித்திட கூடுதல் தொகைக்காக விடுக்கப்பட்ட கோரிக்கையினை ஏற்று, கட்டிடப் பணிகளுக்காக மேலும் 50 லட்சம் ரூபாய்க்கான காசோலை நேற்று முதல்வரால் வழங்கப்பட்டது. அவ்வகையில், நவிமும்பைத் தமிழ்ச் சங்கக் கட்டட விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்காக தமிழ்நாடு அரசின் சார்பாக மொத்தம் ரூ. 1 கோடியே 25 லட்சம் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மகேசன் காசிராஜன், தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, இந்து சமய அறநிலையத்துறை சார்பில் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பணியாற்றி ஓய்வு பெற்ற 69 திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் காலஞ்சென்ற திருக்கோயில் பணியாளர் ஒருவரின் வாரிசுதாரர் ஆகியோருக்கு 2,70,09,752 ரூபாய் பணிக்கொடை வழங்கிடும் அடையாளமாக 12 ஓய்வு பெற்ற திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்கு பணிக்கொடையும், பணிக்காலத்தில் இறந்த 3 திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப நல நிதியாக தலா 3 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். அருகில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உடனிருந்தார்.

## நுபுர்சர்மாவுக்கு ஆதரவாக பதிவிட்டவர் படுகொலை:

# மக்கள் அமைதி காக்க ராஜஸ்தான் முதல்வர் கெலாட் வேண்டுகோள்

உதய்பூர்,ஜூன் 29-

நுபுர் சர்மாவுக்கு ஆதரவாக டுவிட்டரில் பதிவிட்ட கண்ணையா லால் என்பவர் இரண்டு பேரால் கொடூரமாக வெட்டிக்கொல்லப்பட்ட சம்பவம் ராஜஸ்தானில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து மக்கள் அமைதி காக்க வேண்டும் என்று முதல்வர் அசோக் கெலாட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நபிகள் நாயகம் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்திருந்தார் பா.ஜ.க.வின் முன்னாள் செய்தி தொடர்பாளர் நுபுர் சர்மா. இவருக்கு பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

நுபுர் சர்மாவை கைது செய்ய வேண்டும் என பரவலாக கோரிக்கைகள் எழுந்த நிலையில், அவர் மீது வழக்கு மட்டும் பதிவு செய்யப்பட்டது. நுபுர் சர்மா கைது செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வரும் எதிர்க்கட்சிகள் மத்திய அரசை சாடி வருகின்றன.

இந்த நிலையில், ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் டெய்லர் கடை நடத்தி வந்த கண்ணையா லால் என்பவர், நுபுர் சர்மாவை ஆதரித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டதாக கூறப்படுகிறது. இதனால், அவரை பட்டப்பகலில் கடைக்குள் வைத்து இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் தலையை துண்டித்து கொலை செய்துள்ளனர். மேலும், அதனை வீடியோ எடுத்து எச்சரிக்கையும் செய்துள்ளனர். இதனால், உதய்பூர் பகுதியில் பெரும் பதட்டம் நிலவி வருகிறது.

சம்பவ இடத்தில் குவிந்துள்ள போலீசார் அங்கு சட்ட ஒழுங்கு பாதிக்காத வண்ணம் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், உதய்பூரில் அனைத்து கடைகளும் மூடப்பட்டுள்ளன. உதய்பூரில் இணைய சேவையும் முடக்கப்பட்டுள்ளது. மக்கள் அமைதி காக்க வேண்டும் என்று ராஜஸ்தான் முதல் மந்திரி அசோக் கெலாட் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனிடையே குற்றவாளிகளை கைது செய்ய போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில், செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், பத்திரிகையாளர்கள் நலன் காக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள பத்திரிகையாளர் நல வாரியத்தின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சித்துறை செயலாளர் மகேசன் காசிராஜன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் வீ.ப.ஜெயசீலன், பத்திரிகையாளர் நல வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



● ஜி-7 உச்சி மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள ஜெர்மனி சென்றிருந்த பிரதமர் நரேந்திரமோடி நேற்று, தனது பயணத்தை முடித்துக்கொண்டு ஐக்கிய அரபு அமீரகத்திற்கு சென்றார். அபுதாபி விமான நிலையத்தில் பிரதமர் நரேந்திரமோடியை, ஐக்கிய அரபு அமீரக தலைவர் ஷேக்முகமது பின் சயத் அல்நயன் கைகுலுக்கி வரவேற்றார்.

# ஷேக் கலிபா மறைவுக்கு பிரதமர் மோடி நேரில் இரங்கல்

அபுதாபி,ஜூன் 29-

ஜெர்மனி பயணத்தை நிறைவு செய்து இந்தியா திரும்பும் வழியில் பிரதமர் மோடி ஐக்கிய அரபு அமீரகம் சென்றார். அங்கு ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபராக இருந்த ஷேக் கலிபாவின் மறைவுக்கு நேரில் இரங்கல் தெரிவித்தார்.

ஜி-7 நாடுகள் உச்சி மாநாடு ஜெர்மனியின் எல்மாவ் நகரில் கடந்த 3 தினங்களுக்கு முன் தொடங்கியது. ஜெர்மனியின் ஜனாதிபதி ஓலாப் ஸ்கோல்சின் அழைப்பின் பேரில் இந்த மாநாட்டில் பிரதமர் மோடி கலந்து கொண்டார். 2 நாள் நடைபெற்ற இந்த மாநாடு நிறைவடைந்ததும் அங்கிருந்து கிளம்பி, இந்தியா வரும் வழியில் பிரதமர் மோடி ஐக்கிய அரபு அமீரகம் சென்றார்.

அபுதாபி விமான நிலையத்தில் வந்திறங்கிய பிரதமர் மோடியை, ஐக்கிய அரபு அமீரகத்தின் தற்போதைய அதிபர் ஷேக் முகம்மது பின் சையது அல் நஹ்யான் வரவேற்றார். தொடர்ந்து இரு தலைவர்களும் இருதரப்பு உறவுகள் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை மேற்கொண்டனர்.

மேலும், அமீரகத்தின் முன்னாள் அதிபர் ஷேக் கலீபா பின் ஜாயித் அல் நஹ்யானின் மறைவுக்கு அதிபர் ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யானை நேரில் சந்தித்து இரங்கல் தெரிவித்தார்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபராக இருந்த ஷேக் கலிபா கடந்த மே 13 ஆம் தேதி காலமானார்.

அவரது மறைவுக்கு பிரதமர் மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து இருந்தார். மேலும், இந்தியா ஒரு நாள் துக்கம் அனுசரித்தது.

# ஜூலை 10-ம் தேதி வரை அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே எரிபொருள்

## இலங்கை அரசு அறிவிப்பால் மக்கள் கவலை

கொழும்பு,ஜூன் 29-

இலங்கையில் வரும் ஜூலை 10-ம் தேதி வரை அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே எரிபொருள் வழங்கப்படுமென அரசு அறிவித்துள்ளதை அடுத்து அங்கு மக்கள் பெரும் கவலையில் மூழ்கியுள்ளனர்.

அன்னியச் செலாவணி பற்றாக்குறை, அதையடுத்து தொடர்வினையாய் ஏற்பட்ட பிரச்சினைகளால் அண்டை நாடான இலங்கை தவித்து வருகிறது. கடந்த ஏப்ரல் மாதம் முதல் தொடர்ந்து பொது மக்களின் போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் இலங்கையில் ஜூலை 10-ம் தேதி வரை அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே பெட்ரோல் மற்றும் டீசல் வழங்கப்படும் என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இதன்படி நேற்று முதல் ஜூலை மாதம் 10-ம் தேதி வரை அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே எரிபொருட்கள் விநியோகம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நிலைமையை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். மேலும் ஜூலை மாதம் 10-ம் தேதி வரை நகர்புற கல்வி நிலையங்கள் இயங்காது என்றும் ஏனைய அனைத்து சேவைகளும் முடக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதனால் அங்கு மக்கள் பெரும் கவலையில் மூழ்கியுள்ளனர். இதனிடையே மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து சேவைகளையும் தற்காலிகமாக நிறுத்தி வைப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

# தமிழகத்தில் 11 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை,ஜூன் 29-

தமிழகத்தில் நீலகிரி மற்றும் கோவையில் இன்று கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

மேற்கு திசை காற்று வேக மாறுபாடு காரணமாக இன்றும், நாளையும் தமிழகம், புதுவையில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், தி.மலை, ராணிப்பேட்டை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம் மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் சென்னை வானிலை மையம் முன்னதாக தெரிவித்துள்ளது.

சென்னையை பொறுத்தவரை அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் கானப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போதுமான தண்ணீர் இருப்பு உள்ளதால்

# ஜூலை 1 முதல் கிருஷ்ணா நீர் திறப்பை நிறுத்த தமிழக அதிகாரிகள் கோரிக்கை

ஊத்துக்கோட்டை,ஜூன் 29-

சென்னை குடிநீர் ஏரிகளில் போதுமான அளவு தண்ணீர் இருப்பு உள்ளதால் ஜூலை 1 முதல் கிருஷ்ணா நீர் திறப்பை நிறுத்த ஆந்திர அரசுக்கு தமிழக அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிருஷ்ணா நதி நீர் பங்கீடு திட்டத்தின்படி ஆந்திரா அரசு வருடந்தோறும் 12 டி.எம்.சி. தண்ணீரை தமிழகத்துக்கு வழங்க வேண்டும். ஜூலை முதல் அக்டோபர் வரை 8 டி.எம்.சி. ஜனவரி முதல் ஏப்ரல் வரை 4 டி.எம்.சி. தண்ணீரை நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு திறந்துவிட வேண்டும். தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று ஆந்திர அரசு கடந்த மாதம் 5-ம் தேதி கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறந்தது. இந்த தண்ணீர் கடந்த மாதம் 8-ம் தேதி தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை அருகே உள்ள தாமரைகுப்பம் ஜீரோ பாயிண்டுக்கு வந்தடைந்தது. அன்றிரவே பூண்டி ஏரிக்கு சென்றடைந்தது.

தற்போதைய நிலவரப்படி பூண்டி ஏரிக்கு 550 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. சென்னை குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு பூண்டி ஏரிக்கு வரும் கிருஷ்ணா தண்ணீர் முழுவதும் செம்பரம்பாக்கம், புழல் ஏரிகளுக்கு அனுப்பப்பட்டு வந்தது. இதனால் இந்த 2 ஏரிகளிலும் நீர் இருப்பு அதிகரித்து. 90 சதவீதத்துக்கும் மேல் தண்ணீர் உள்ளது. இதற்கிடையே கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த பலத்த மழை காரணமாக செம்பரம்பாக்கம், புழல் ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது.

இதைத் தொடர்ந்து பூண்டி ஏரியில் இருந்து செம்பரம்பாக்கம், புழல் ஏரிகளுக்கு தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. எனினும் தொடர்ந்து 3 நாட்கள் பலத்த மழை கொட்டியதால் பாதுகாப்பு கருதி செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து உபரி நீரை வீணாக வெளியேற்றவேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும் செம்பரம்பாக்கம், புழல் ஏரிகளில் போதுமான நீர் இருப்பதால் கூடுதல் தண்ணீரை சேமிக்க முடியாத நிலை உள்ளது. இதைத் தொடர்ந்து கண்டலேறு அணையில் இருந்து வரும் கிருஷ்ணா தண்ணீர் முழுவதும் தற்போது பூண்டி ஏரியிலேயே சேமிக்கப்பட்டு வருகிறது. பூண்டி ஏரியின் மொத்த கொள்ளளவு 3,231 மி.கனஅடி ஆகும். இதில் தற்போது 1,383 மி.கனஅடி தண்ணீர் உள்ளது. எனினும் பூண்டி ஏரியில் கூடுதல் தண்ணீரை சேமிக்க அதிகாரிகள் விரும்பவில்லை.

மேலும் ஏரியில் உள்ள நீர் திறப்பு மதகுகளை சீரமைத்து தண்ணீர் சேமிப்பை அதிகரிக்க அதிகாரிகள் முடிவு செய்து உள்ளனர். இதே போல் கண்ணன்கோட்டை தேர்வாய் கண்டிகை ஏரியிலும் போதுமான தண்ணீர் உள்ளது. இதையடுத்து கண்டலேறு அணையில் இருந்து கிருஷ்ணா தண்ணீர் திறப்பை வருகிற 1-ம் தேதி முதல் நிறுத்த தமிழக நீர்வளத்துறை அதிகாரிகள் ஆந்திர அரசுக்கு கோரிக்கை விடுத்து உள்ளனர். அடுத்த கட்டமாக செப்டம்பர் மாதத்தில் தண்ணீரை திறந்து விடும்படி கூறி உள்ளதாக தெரிகிறது.

இதுகுறித்து நீர்வளத்துறை அதிகாரிகள் கூறும்போது, சென்னை குடிநீர் ஏரிகளில் போதுமான தண்ணீர் இருப்பு உள்ளது. இதனால் கிருஷ்ணா தண்ணீர் திறப்பை ஜூலை 1-ம் தேதி முதல் நிறுத்தும்படி ஆந்திர அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளோம். தற்போது ஏரியில் உள்ள தண்ணீரை வைத்து சென்னையில் 8 மாதங்களுக்கு தட்டுப்பாடு இன்றி குடிநீர் வினியோகம் செய்ய முடியும் என்றனர்.